Registered as a news paper. பக்கங்கள்:- பன்னிரண்டு விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 மாசி 25 ஹிஜ்ரி 1426 ஸபர் 08 (09.03.2006) வியாழக்கிழமை இதழ் 159

யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# புலிகள் மீதான பயணத் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கவேண்டும்!

## பெல்ஜிய மாநாட்டில் வலியுறுத்து

பிரஷெல்ஸ்

விடுதலைப் புலிகள் மீதான பயணத் தடையை ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக நீக்க வேண்டுமென பெல்ஜியத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பையும், இலங்கை அரசாங்கத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் சமத்துவமான முறையில் அணுகவேண்டும் என்றும் பிரஷெல்ஸிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இன நெருக்கடிக்கான சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சி என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பிரித்தானிய தொழிற்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோபட் இவான்ஸ், தமிழர் மனித உரிமைகள் மையத்தின் அனைத்துலகப் பணிப்பாளர் மைக்குநால், பண்டாரநாயக்கவின் குடும்ப உறவினர் மருத்துவ பேராசிரியர் பிறயன் செனிவரத்தன ஆகியோர் உரையாற்றினர்

கருத்தரங்குக்கு தலைமை வகித்த ரோபட் இவான்ஸ் தான் நேரில் அறிந்துகொண்ட இலங்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய இதழில்

க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக ஆசிரியர் ஷாம் தயாரித்த கணக்கீடு மாதிரி வினாத்தாள் வெளி வரும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## அமைச்சர் நிமாலின் கட்அவுட் தீக்கிரை!

கொழும்பு

பதுளை மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கட்அவுட் இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

ஜெனிவா பேச்சுக்களுக்கு அரச குழுவுக்கு தலைமை தாங்கிச்சென்ற அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை கௌரவிக்கும் வகையில் பதுளை - மணிக்கூட்டுச் சந்திக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த பாரிய கட்அவுட்டே தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற சக்திகள் தொடர்புபட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# வாகனங்களில் வந்திறங்கிய படையினர் ஏழாலை - கடைத் தொகுதியில் தேடுதல்!

## உரிமையாளரை அறையில் பூட்டித் தாக்கியதாக முறையீடு

யாழ்ப்பாணம்

வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் ஏழாலை - மயிலங்காட்டில் வைத்து இராணுவத்தினரால் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டு தாக்கப்பட்டதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஏழாலை - மயிலங்காட்டில் தொலைத்தொடர்பகம், உணவகம், பேக்கரி உள்ளிட்ட வர்த்தகத் தொகுதியை நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கவசவாகனங்களில் வந்திறங்கிய நூற்றுக்கணக்கான படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இதன்போது பேக்கரி அமைந்துள்ள காணியின் பின்பகுதி உழவு இயந்திரத்தால் கிளறப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்பின்னர் வர்த்தக நிலைய உரிமையாளரான இளைஞரை வர்த்தக நிலைய அறையொன்றினுள் பூட்டி விசாரணை மேற்கொண்டதுடன் கறுப்புத் துணியால் முகத்தை மூடிக்கட்டிய படையினர் தாக்கியுமுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் ஒருவரை கைது செய்யவோ விசாரணை மேற்கொள்ளவோ வேண்டுமெனில் அந்தப் பகுதி கிராம அலுவலரும் பிரசன்னமாக இருக்கவேண்டுமெனவும் பொது இடங்களில் கடமையில் ஈடுபடும் இராணுவத்தினர் முகத்தை துணியால் மூடிமறைக்கக்கூடாதெனவும் யாழ். மேலதிக நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-த)

# இறுதிவருட மாணவர்களுக்கு விரிவுரைகள் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம்

நீண்டகாலத்தின் பின்னர் நேற்று இறுதி வருட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பமாகியபோதும் விரிவுரைகளுக்கு சமுகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

நேற்று குறைந்தளவான மாணவர்களே யாழ்.பல்கலைக்கழக வளவில் நடமாடியதை காணக்கூடியதாக இருந்தது.

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் - பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், மாணவர்கள் மீது மேற்கொண்டுவந்த இராணுவ நடவடிக்கைகளால் பல்கலைக்கழக செயற்பாடுகள் யாவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் மூலமே உரிமைகளை

# கடற்படைக்கு ஆயுதங்கள் வாங்க

# யுத்தத்தின் மூலமே உரிமைகளை வென்றெடுக்க தூண்டுகிறார் மகிந்த

## திருமலைகட்டளை தளபதி கேணல் சொர்ணம்



கிளிநொச்சி —

தமிழ் மக்கள் தமது உரிமைகளை யுத்தத்தின் மூலம் வென்றெடுக்க வேண்டிய நிலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உருவாக்கி வருகிறார் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

கிராமிய படையினருக்கான 3 மாத பயிற்சி நிறைவு நிகழ்வு ஈச்சிலம்பற்று சிறீசெம்பகா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

எமது கிராமியப் படையணிகள் உள்ளிட்டவைகளைக் கொண்டு நாம் இன்று மிக வலுவாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைக்கு ஆயுதங்கள் வாங்க பாதுகாப்பு செயலர் சீனா பயணம்!

கொழும்பு —

கடற்படையை நவீனமயப்படுத்தி பலப்படுத்துவதற்கான உதவிகளைப் பெறுநோக்கில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான பாதுகாப்பு உயர்மட்டக் குழுவொன்று சீனாவுக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழுவில் கடற்படை தலைமை அதிகாரி றியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தியும் பிஜிங் சென்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபின்னர் பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் வெளிநாட்டு அதிகாரிகளுடன் நடத்தும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

கடற்படையினருக்கான பயிற்சிகள், ஆயுத தளபாடங்கள் உள்ளிட்டவற்றைப் பெறுவதற்காகச் சீன கடற்படை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளை இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

அரசாங்கம் எப்போதும் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் உள்ளது. ஆனால், விடுதலைப் புலிகள் தங்களின் பலத்தை வலுப்படுத்தும்போது அரசாங்கத்தால் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கமுடியாது என்று அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சீன பயணத்தின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவின் பிரதிப் பாதுகாப்பமைச்சரையும் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இந்த வாரம் நோர்வே பயணம்

கொழும்பு —

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தவார இறுதியில் நோர்வேக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து நாள் பயணமாக நோர்வே செலவுள்ள இவர் -

நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல்ட்டென்பெர்க், நோர்வே சிறப்புத் தூதுவரும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அரச அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களில் இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து விவாதிக்கப்படவிருப்பதாக ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து கலந்துரையாடவே இவர் நோர்வே செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (௦1)

# 3 வருட சேவையைப் பூர்த்திசெய்த தொண்டராசிரியர்களுக்கு நியமனம்!

கொழும்பு —


2004 ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முனனர் மூன்றுவருட சேவையையும், உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

நேற்று கல்வியமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதே கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன் ஹேவகே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் 37 தொண்டர் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தனர். இதன்போது நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றுவார காலத்தினுள் இந்தப் பிரச்சினை குறித்து தாம் ஒரு முடிவைத் தெரிவிப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

## திருமறைக் கலாமன்றம் நடத்திய மகளிர் தின நிகழ்விலிருந்து....






## சிறுவிளம்பரம்

### காவலாளி தேவை

உரும்பிராய் கனடியர்கள் குழுமத்தின் பணிமனை, நூலகம் ஆகியவற்றுக்கு இரவுக் காவலாளி ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கிராமசேவையாளரின் வதிவிடச் சான்றிதழுடன் விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்புக. இணைப்பாளர், உரும்பிராய் கனடியர்கள் குழுமம், உரும்பிராய்.

C / 5132


# மகப்பேற்று சத்திர சிகிச்சைக்கூடம் யாழ்.வைத்தியசாலையில் திறப்பு!



யாழ்ப்பாணம் —

யாழ்.போதனா வைத்தியசாலையில் நவீன முறையில் அமைக்கப்பட்ட மகப்பேற்று சத்திரசிகிச்சைக் கூடம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஞானசோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - இலங்கை வங்கி வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் வி.பாலசுபபிரமணியம், ஜேர்மனிய தொண்டு நிறுவனமான டயகொனி நிறுவனத்தின் பணிப்பாளர் ரி.தம்பிராசா ஆகியோர் மகப்பேற்று சந்திரசிகிச்சைக் கூடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த மகப்பேற்று சந்திரசிகிச்சைக் கூடத்தை டயகொனி நிறுவனம் பல மில்லியன் ரூபா செலவில் அமைத்துள்ளதுடன், இலங்கை வங்கியும் நிதியுதவி அளித்துள்ளது. (த.ரி)















## ஆயுள்வேத வைத்தியசாலை இடம்மாற்றப்பட்டதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம் —

கொக்குவில் மேற்கு - கேணியடியில் இயங்கி வந்த இலவச ஆயுள்வேத வைத்தியசாலையை இடம்மாற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சன சமூகநிலையமொன்றினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் இயங்கிவந்த மேற்படி வைத்தியசாலை வாரத்தில் இருநாட்கள் இயங்கி வந்ததாகவும் முழுநாட்களும் இயங்க வைக்குமாறு பிரதேசசபைச் செயலாளரை கடிதம் மூலம் கேட்டதன் பின் - அந்த வைத்தியசாலை இடம் மாற்றப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 6 வருடங்களாக இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலையை இடம்மாற்றியதால் அருகில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும், வைத்தியசாலை இயங்கி வந்த கட்டடம் தற்போது சமுக சீர்கேட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


## ஹற்றன் நஷனல் வங்கி

HATTON NATIONAL BANK LIMITED

### அடகுப் பொருட்கள் மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளைகளான சுன்னாகம், நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு.

நீங்கள் பெற்ற அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதையும், கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி, காலாவதித் திகதியை நீடித்து கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருட்களை மீட்க / காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் 25.03.2006 அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும். [C/5133] - முகாமையாளர்


# சின்னஞ்சிறு செய்திகள்

## கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் —

பொன்னாலை வரதர்ாஜப் பெருமாள் வித்தியாசாலையின் கட்டடத் திறப்புவிழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி. ரங்கராஜா திறந்துவைப்பார்.

இதன் பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலையில் பரிசளிப்பு விழா இடம்பெறும்.

பாடசாலை அதிபர் வி.மீனேஸ்வரன் தலைமையில் பாடசாலையின் கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தப் பரிசளிப்பு விழாவில் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் பிரதம விருந்தினராகவும், பொன்னாலை கிராமசேவையாளர் இ. ஸ்ரீறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (207)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம் —

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் வரிசையில் நாளை மாலை 4 மணிக்கு கைதடி வீரகத்திப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் 'உன்னோடு சமயம்' எனும் விடயம் பற்றி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவன் கு.குணரோஜன் சொற்பொழிவாற்றுவார்.

இதேவேளை நாளை மாலை 4 மணிக்கு வதிரி பரமானந்த ஆச்சிரமத்தில் அபிவிருத்தி உதவியாளர் ஆர்.மாலதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிவமுகுந்தன் ஆன்மீகச் சொற்பொழி...ற்றுவார்.

தீவகத்தில் நாளை காலை 9 மணிக்கு வங்களாவடி முருகன் ஆலயத்தில் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'சொல்லியபடி செயல்' என்னும் விடயம் பற்றி சி.வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார்.

## உரும்பிராயில் நூலகம் அமைப்பதற்கு ஏற்பாடு

உரும்பிராய் —

கனடாவில் வாழ்ந்துவரும் உரும்பிராய் மக்களால் - பல இலட்சம் ரூபா செலவில் உரும்பிராயில் நூலகம் ஒனறை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் சிறப்பாக அமையவும் இயங்கவும் மக்களிடமிருந்தும், கருத்துக்கள், விமரசனங்களை எதிர்பார்ப்பதுடன், நல்ல பயனுள்ள நூல்களையும் வழங்கி தம்மை அன்புடன் ஊக்குவிக்கும்படி உரும்பிராய் கனடியர்கள் குழுமம் கேட்டுள்ளது.

விமர்சனங்கள், ஆலோசனைகள், நூல்களை - இணைப்பாளர், உரும்பிராய் கனேடியர்கள் குழுமம், உரும்பிராய், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (63)

## விஞ்ஞான ஆய்வு கூட வாரம் சுன்னாகத்தில் ஆரம்பம்

உடுவில் —

வலிகாமம் வல... ...டசாலைகளில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி வரை விஞ்ஞான ஆய்வுகூட வாரம் கொண்டாடப்படவுள்ளது.

செய்முறைகளுக்கு ஏற்ற முறையில் ஆய்வு கூடத்தை அல்லது விஞ்ஞான அறையை கவர்ச்சிகரமாக ஒழுங்குபடுத்துதல், ஆய்வு கூட, விஞ்ஞான அறையில் உச்சப் பயனை பெறுதல், மாணவர்களின் செய்முறைத் திறனை அதிகரித்தல், ஆய்வு கூட உபகரணங்கள், அவற்றின் பயன்பாடுகளை அறிந்திருத்தல் போன்ற நோக்கத்துக்காக ஆய்வுகூட வாரம் அனுஷ்டிக்கபபடவுள்ளது.

ஆய்வுகூடம் இல்லாத பாடசாலைகள் விஞ்ஞான செய்திப் பலகைகள் அமைத்தல், செய்முறை வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி சகல வகுப்புக்களிலும் பங்குகொள்ள செய்தல், தரம் 6 -13 வரையான மாணவர்களுக்கு விஞ்ஞான உபகரணங்கள் அனைத்தையும் காண்பித்து அவற்றை இனங்காணவும் பயனபாடு பற்றியும் அறியும் வ... ஆசிரியர்கள் செயற்பட வேண்டுமென கே...பட்டுள்ளது. (101)


## CARITAS - HUDEC JAFFNA

## VACANCY

1. Livelihood Field Officer

To work in full partnership with the Caritas - Hudec Livelihood Program Manager & Livelihood Program Expatriate Advisor.

Base Station : Mullaitivu (2 Positions)

Main Duties :

- Supervise and manage animators/Social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable groups.
- Assist the Livelihood Program Manager in coordination with Livelihood Advisor in conducting community participatory process in the area & responsibility of Caritas - Hudec.
- Manage to collect and assist in analysis of all data required
- Identify capacity bulding needs of animators/social workers and local partners.
- Organize training and workshops to build and improve capacities of the above mentioned staff.
- Assist on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with govermment, NGOs, UN organisations and the private sector.
- Prepare accurate and timely reports to supervisors.
- Assist to monitor and evaluate ilvelihood programs (fisheries, agriculture, small enterprises)

Requirements :

- Experience in high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
- Experience in project planning, implementation, monitoring and evaluating.
- Excellent skill in monitoring implementation of program activities.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in WinWord, Excel and email software.
- Age between 25 - 40 years.
- Good knowledge of written and spoken English and able to prepare Monthly Progress Report.
- Good team player.
- Good communication skills.

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contact no. & minimal two non related referees to the following address, latest by 17 March 2006.

father Jeyakumar,
Caritas - Hudec,
14, Mathew's Road, Deogu Street,
Jaffna.

or E - mail : hudec@sltnet.lk

[C/5134]

# துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை தடுத்துநிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள்

கொழும்பு —

ஜெனிவாப் பேச்சுக்களின் முடிவுகளின்படி, இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் துணை இராணுவக் குழுக்களின் செயற்படுகளை அரசாங்கம் தடுக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத் துள்ளது.

இது குறித்து தேசிய சமாதானப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்-

ஜெனிவா கூட்டறிக்கையின்படி இருதரப்பினரும் வன்முறைகளுக்கு முடிவுகட்டவேண்டும். ஆனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதல் நடத்தியதில் இரு போராளிகள் உயிரிழந்துள்ள சம்பவத்தின் மூலம் ஜெனிவா கூட்டறிக்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஜெனிவா கூட்டறிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வண்ணம் அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் உள்நுழைந்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை அரச படைகள் மீறியுள்ளன. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணை ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் தொடர்பாக சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் கடுமையாக அதிருப்தி கொண்டுள்ளனர்.

இது தொடர்பான ஆதாரங்களை ஜெனிவாப் பேச்சு மேசையில் விடுதலைப் புலிகள் முன்வைத்தனர்.

ஜெனிவா கூட்டறிக்கையில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தது.

ஜெனிவா பேச்சுக்கள் வெற்றி பெற வேண்டுமானால் இத்தகைய ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் ஜெனிவாக் கூட்டறிக்கைக்கு எதிராக அவர்களைச் செயற்பட அனுமதிக்கக்கூடாது என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 100 வருடமரம் வீழ்ந்து தந்தையும் மகனும் பலி!

கொழும்பு —

நுவரெலிய மாநகரசபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பழைய கடை வீதிப்பிரதேசத்தில் சுமார் 100 வருடங்கள் பழமைவாய்ந்த மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்தனர்.

45 வயது மதிக்கத்தக்க தந்தையும், 15 வயதான மகனுமே இந்த அனர்த்தத்தில் பலியாகினர். இவர்கள் கடை வீதியில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக வந்திருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த மரம் வீழ்ந்ததில் ஓட்டோ ஒன்றும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# தேர்தல் ஆணையாளரின் மனு உயர்நீதிமன்றம் நிராகரிப்பு!

கொழும்பு —

கொழும்பு மாநகரசபைக்கு இந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற விருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை இடைநிறுத்தும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த இடைக்கால உத்தரவை நீக்குமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நிராகரித்தது.

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு இந்த மனுவை விசாரித்துப் போதிய விடயங்கள் இல்லை என்று கூறி அதை நிராகரித்தது. தேர்தல் ஆணையாளரும், கொழும்பு தெரிவத்தாட்சி உத்தியோகத்தரும் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# சுதந்திரக்கட்சி மத்திய குழுவில் அமைச்சர் பௌசியும் சேர்ப்பு!

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களாக ரயில் போக்குவரத்து மற்றும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் ஹபராதுவ சுதந்திரக் கட்சி அமைப்பாளரான சந்திம வீரக்கொடி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க இந்த நியமனங்களை அறிவித்துள்ளார். இந்த நியமனங்கள் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.


இருவரும் மத்திய குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக சந்திரிகா கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் 3 தொகுதிகளுக்கு புதிதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களையும் சந்திரிகா நியமித்துள்ளார்.

அரச வங்கிகள் அபிவிருத்தி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ - மகரகம தொகுதி அமைப்பாளராகவும், அதாவுட செனவிரட்ண கொழும்பு மேற்கு அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் இந்த நியமனங்களை சந்திரிகா அறிவித்துள்ளார். (01)

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி உரை!



கொழும்பு —

'சுயநிர்ணய உரிமைகள்' என்ற தொனிப்பொருளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் உரை யாற்றினார்.

மனித உரிமைகளுக்கான தமிழ் மையத்தின் கூட்டு ஆதரவுடன் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேட் இவான்ஸ் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தார்.

# புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்களும் விடுதலைக்கான பணியில் ஈடுபட்டுள்ளனர்

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

கொழும்பு —

புலம்பெயர்ந்த மக்கள் விடுதலையில் அவாவாக உள்ளனர் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் திரும்புவதற்கு முன்னர் ஜெனிவாவில் தெரிவித்தார்.

நாங்கள் இந்த பேச்சுவார்த்தையின் பின்னர் நோர்வே நாட்டுக்குச் சென்று அங்கேயுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அந்த நாட்டுத் தலைவர்கள் மற்றும் அங்கேயுள்ள அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் அனைவரையும் சந்தித்து - பேச்சுவார்த்தை தொடர்பாகவும், தற்போதைய நாட்டு நிலைமை தொடர்பாகவும், எமது மக்கள் படும் கஷ்டங்கள் தொடர்பாகவும் எடுத்துரைத்தோம். அவர்கள் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கேட்டது மட்டுமல்ல அவர்கள் உணரக்கூடியதாக இருந்தது. அதன் பின்னர் நாங்கள் இங்கே இருந்த காலத்தில் எமது மக்களுடன் புலம்பெயர்ந்து இருக்கின்ற மக்களுடன் பலவேறுபட்ட இடங்களில் சந்தித்து கலந்துரையாடினோம். அவர்கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள்.


எப்போது தமது தாய்நாட்டுக்கு நாம் செல்லலாம். பெற்றோர், உறவினர்களுடன் சென்று எவ்வாறு பழைய நிலைக்கு அதாவது அந்தக் காலத்தில் இருந்தபோது சந்தோசமாக வாழலாம் என்ற ஆவலோடுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளை எம்மால் உணரக்கூடியதாக இருக்கிறது.

தற்போது இந்தக் கடும் குளிரிலும் அவர்கள் எம்மை வந்து ஆவலோடு சந்தித்தார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் வந்து தங்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அதை நினைக்கும் போது உண்மையில் கடும் குளிரிலும், கஷ்டமான சூழலிலும் அவர்கள் தமது தாய் மண்ணையும், அங்கே இருக்கின்ற மக்களையும் எமது போராட்டம் தொடர்பாக மிகவும் ஆவலாகவும், ஆர்வமாகவும் இருப்பதை எம்மால் உணரக்கூடியதாக இருக்கிறது.

ஆகவே நாம் எமது மக்களுக்காக இந்தச் தேசத்தின் விடுதலைக்காக விடுதலையை வெகுவிரைவாக வென்றெடுக்க வேண்டும் என்ற அவா இவர்களைச் சந்தித்த போது எமக்கு மேலும் மேலும் அதிகரித்தே செல்கிறது.

ஆகவே, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தக் கட்டத்தில் விடுதலைக்காக உழைக்கவேண்டும். புலம்



பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் கடந்த காலத்தைப்போன்று தொடர்ந்தும் விடுதலைக்கான தமது பணிகளைச் செய்து வருகிறார்கள்.

தொடர்ந்தும் மேலும் அதிகமாகச் செய்ய வேண்டும் என நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கடன் அட்டை பாவிப்போர் இலங்கையில் அதிகரிப்பு!

கொழும்பு —

இலங்கையில் கடன் அட்டை பாவிப்போரின் தொகை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி - கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 5 லட்சத்து 7 ஆயிரத்து 591 கடன் அட்டைகள் மொத்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 6 லட்சத்து 37 ஆயிரத்து 326 கடன் அட்டைகள் பாவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடந்த வருடம் ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 735 கடன் அட்டைகளின் பாவனை அதிகரித்துள்ளது.

இந்தக் கடன் அட்டைகளின் மூலம் 2004 ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 111 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது. ஆனால், இது கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆயிரத்து 9 மில்லியனாக வருமானம் அதிகரித்துள்ளதெனவும் அந்தத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

# எட்டு மீனவர்கள் கச்சதீவில் கைது!

கொழும்பு —

கச்சதீவுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த எட்டு மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் -

கச்சதீவு அருகே டைனமைற் போன்ற வெடிபொருட்கள் வைத்திருந்த 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீனவர்களா? அல்லது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களா என்பது தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மீன்பிடித்தடை மீளாய்வுக்கு ஜனாதிபதி மகிந்த உத்தரவு!

## கடற்படையினர் எதிர்ப்பு


கொழும்பு —

வடக்கு - கிழக்கில் மீன்பிடித் தடைகளை மீளாய்வு செய்ய கடற்படையினருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டதாகவும், இதற்கு கடற்படையினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பான அறிக்கையை தனக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கடற்படை தளபதியிடம் மகிந்த ராஜபக்ஷ கேட்டிருந்தார்.

ஆனால், திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மற்றும் அதனை உள்ளடக்கிய பகுதிகளில் மீன்பிடித் தடையை நீக்குவதற்கு கடற்படையினர் மறுத்துள்ளனர்.

இதனிடையே திருகோணமலை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புடன் இது தொடர்பாக வீடியோ கலந்துரையாடல் மூலம் பேச்சு நடத்த உரிய ஏற்பாடுகளைச்



செய்யுமாறு தனது செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியதாகத் தெரியவருகிறது.

அண்மையில் திருகோணமலைக்கு அமைச்சர் போகொல்லாகம பயணம் மேற்கொண்டிருந்தபோது அவரைச் சந்தித்த வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள்- மீன்பிடித்தொழில் முடக்கத்தால் கடலோர சிறுதொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்திருந்தனர்.

# கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு 2008 ஆம் ஆண்டுடன் பூர்த்தியாகும்

## அரச அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எதிர்வரும் 2008 ஆம் ஆண்டு பூர்த்தியாகுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் கட்டுமான அபிவிருத்திக்குழுவின் செயலாளர் ஜெயசிங்க கருத்துத் தெரிவிக்கையில் -

இதுவரை 55 வீத கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. தற்போதைய கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின்படி சகல புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளும் எதிர்வரும் 2008 ஆம் ஆண்டுக்குள் அகற்றப்பட்டு இலங்கை கண்ணிவெடிகளிலிருந்து விடுவிக்கப்படும்.

தற்போது தமிழர்கள் வாழும் கிராமப் பகுதிகளிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டம் இந்த வருட முடிவுக்குள் பூர்த்தியாக்கப்படும்.

எனினும், உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் இராணுவத்திடமே உள்ளன. அந்தப் பகுதிகளிலுள்ள முகாம்கள் மற்றும் முக்கிய காவலரண்களை சூழவுள்ள பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு சிறிது காலம் எடுக்கும்.

அரச மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டங்களை ஐ.நாவின் கீழுள்ள நிறுவனங்கள் கண்காணித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போர்; இன்று 100 ஆவது போட்டி ஆரம்பம்!

யாழ்ப்பாணம் —

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென்ஜோன்ஸ் மற்றும் மத்திய கல்லூரிகளுக்கிடையிலான 100 ஆவது கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.


இதுவரை நடைபெற்ற இரண்டு கல்லூரிகளுக்குமிடை யிலான 99 போட்டிகளில் - 33 போட்டிகளில் சென்ஜோன்ஸ் கல்லூரியும், 22 போட்டிகளில் யாழ்.மத்திய கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன.

இவ்வருடம் நடைபெற்ற பாடசாலைக்கிடையிலான போட்டிகளில் 7 போட்டிகளில் பங்குகொண்ட சென்ஜோன்ஸ் கல்லூரி 4 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

அதேவேளை 8போட்டிகளில் பங்குகொண்ட யாழ். மத்திய கல்லூரி 3 போட்டிகளில் பெற்றி பெற்றுள்ளது.

சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு என்.நவகீதனும், யாழ். மத்திய கல்லூரிக்கு ஜி.மகீபனும் தலைமை தாங்குகின்ற னர்.

## யாழ்.மத்திய கல்லூரி



இருப்பவர்கள்-

(இடமிருந்து வலம்)

வி.கே.சண்முகலிங்கம் (பயிற்சிஆலோசகர்) வி.எஸ்.மகேந்திரன், ஜி.மகீபன் (அணித் தலைவர்), எஸ்.பத்மநாதன் (கல்லூரி அதிபர்), ஜே.டிலான் (அணி பிரதித்தலைவர்), எஸ்.சுரேஸ் மோகன் (பயிற்சியாளர்), ஈ.எவ்.ஆர். ஜெயக்குமார் (அணிஆசிரியர்),


நிற்பவர்கள் முதல்வரிசை இடமிருந்து வலம்

எஸ்.ஜேம்ஸ்ஜான்சன், கே.செல்டன், ஜே.ஆர்.ஆபிரகாம் பிரசாத், எஸ்.வேணுதரன், ஆர்.வினோ..ந்குமார், எஸ்.பிரகாஸ் பேசன், ஏ.தனுஜன், பி.சுமித், டி.சுதர்சன்

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை இடமிருந்து வலம்

ஜே.அன்ரன்மயூரன், எஸ்.சங்கீதன், பி.தயான், டபிள்யூ.கிறிஸ்ரிஜோன்சன், ஜே.ஆர். டானியல் நிதர்சன், ஜே.வியாசன், என்.மதிப்பிரியன், என்.நவநீத்

## சென்.ஜோன்ஸ் கல்லூரி



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)

கே.எஸ்.முகுந்தன் (பயிற்சியாளர்), ரி.நிரூபன், என்.நவகீதன்(அணித்தலைவர்), எஸ்.தனபாலன் (கல்லூரி அதிபர்), பி.சகிந்தன்(அணி பிரதித்தலைவர்), ஜி.சஞ்சீவன், வி.எஸ்.பி.துசிதரன்,

**நிற்பவர்கள் முதலாவது** வரிசை (இடமிருந்து வலம்)

பி.நேசவர்மன், ரி.கிருஷாந், ஏ.அக்ஷயன், கே.ஜனுசன், பி.கஜரூபன், வி.ராகுலன், ஏ.கிரிசன்,

**நிற்பவர்கள் இரண்டாவது** வரிசை (இடமிருந்து வலம்)

வி.பிரணவன், என்.ஹரிப்பிரவீன், என்.டினேஸ், கே.வென்சகார்,

### யாழ்.மத்திய கல்லூரி

குணசேகரம் - மகீபன் (அணித்தலைவர்) வலது கை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர், வலது கை மிகவேக பந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை வீரர் - 2. ஜெயாநந்தன் - டிலான் (பிரதித்தலைவர்) வலது கை மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர், வலது கை மிதவேகப்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் - 3. டொன்பொஸ்கோ சுதர்சன் - வலது கை ஆரம்பத் துடுப்பாட் வீரர், வலது கை சுழற்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர், பிரதி விக்கெட் காப்பாளர் - 4. நவரட்ணலிங்கம் நவநீத் - வலது கை ஆரம்பத் துடுப்பாடட வீரர், வலது கை மிகவேகப்பந்து வீச்சாளர், சகல துறைவீரர் - 5. ஜோசப் ராஜரட்ணம் ஆபிரகாம் பிரசாத் - மூன்றாவது இடது கை துடுப்பாட்ட வீரர், வலது கை சுழற்பந்து வீச்சாளர், சிறந்த சகல துறைவீரர் -

6. குலேந்திரன் செல்டன் - விக்கெட் காப்பாளர், வலது கை நடுத்தர துடுப்பாட்டவீரர், சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதை கடந்த வருடம் பெற்றவர் - 7.பாஸ்கரன் தயான் - வலது கை நடுத்தர துடுப்பாட்ட வீரர், வலது கை மிகவேக பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர், சிறந்த சகல துறை வீரருக்கான விருதை கடந்த வருடம் பெற்றவர் - 8. ஜெகநாதன் வியாசன் - வலது கை துடுப்பாட்ட வீரர், வலது கை பந்து வீச்சாளர் - 9. நாகநாதன் மதிப்பிரியன் - இடதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் - 10.வென்சஸ்லொஸ் கிறிஸ்ரிஜோன்சன் - இடதுகை மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர், வலது கை சுழற்பந்து வீச்சாளர் -

11.சிறிரஞ்சன் பிரகாஸ்பேஷன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், வலது கை வேகப்பந்து வீச்சாளர், 12. இராசதுரை வினோத்குமார் - வலதுகை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர், வலது கை சுழற்பந்து வீச்சாளர் - 13. சிறிரங்கன் சங்கீதன் - வலது கை துடுப்பாட்ட வீரர், வலது கை சுழற்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் - 14. சின்னத்துரைராசா ஜேம்ஸ் ஜான்சன் - மேலதிக விக்கெட் காப்பாளர், வலது கை மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் - 15. அலெக்சான்டர் தனுசன வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர் - 16.ஜெகநாதன் அன்ரன் மயூரன் - வலது கை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிகவேகப்பந்து வீச்சாளர்,

### சென்.ஜோன்ஸ் கல்லூரி


1. நவரட்னராசா நவகீதன் (தலைவர்) சகல துறைவீரர், மத்தியவரிசை இடதுகை துடுப்பாட்ட வீரர், ஆரம்ப பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் - 2. பத்மநாதன் சகிந்தன் (பிரதித்தலைவர்) வலதுகை துடுப்பாட்ட வீரர், இடையிடையே சுழற்பந்து வீச்சாளர் - 3. தியாகராஜா நிருபன் சகல துறைவீரர், மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர், சிறந்த களத்தடுப்பாளர் - 4. ஞானேந்திரன் சஞ்சீவன் வலது கை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் -

5. பரதன் கஜரூபன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், இடதுகை சுழற்பந்து வீச்சாளர், சிறந்த சகலதுறைவீரர் - 6. ஒகஸ்ரின்- கிரிசன் - வலதுகை பந்துவீச்சாளர், வலது மிதவேகப்பந்து வீச்சாளர், 7. தர்மகுலசிங்கம் கிருசாந் - வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகபந்து வீச்சாளர் 8. பத்மநாதன் நேசவர்மன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர் - 9. நாதன் டினேஷ் - வலதுகை துடுப்பாட்ட வீரர், பதில் விக்கெட் காப்பாளர் -

10. வாமதேவா ராகுலன் - இடதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர், 11. ஆத்மநாதன் அக்சயன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர் - 12. காந்திராஜ் வென்சகார் - வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர் -

13. குகதாசன் ஜனுசன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர், 14. மாசிலாமணி ஹரிபிரவீன் - இடதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், 15. விவேகானந்தராஜா பிரணவன் - வலதுகை துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர், வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.

## விளையாட்டு



# முரளியின் சுழல்பந்து வீச்சில் சுருண்டது பங்களாதேஷ்!

போட்ரா —

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக் கிடையில் நேற்று ஆரம்பமான 2 ஆவது டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.

நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது. இதன்படி அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக ஜாவிட் ஓமர் - நபீஸ் இக்பால் ஜோடி களமிறங்கியது.

ஆரம்பம் முதலே நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடி ஸ்கோர் 52 ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்தது. இந்த நிலையில் முதல் விக்கெட்டாக நபீஸ் இக்பால் வீழ்த்தப்பட் டார். 45 பந்துகளை எதிர்கொண்டு 26 ஓட்டங் களை எடுத்த இக்பால் - முரளிதரனின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜாவிட் ஓமருடன் - ஹபிபுல் பஷார் ஜோடி சேர்ந்தார். இருவரும் ஓரளவு சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் ஸ்கோர் 85 ஐ எட் டியபோது ஜாவிட் ஓமரின் விக்கெட் வீழ்த்தப் பட்டது. 78 பந்துகளை எதிர்கொண்ட ஓமர் 35 ஓட்டங்களுடன் எல் பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்

இந்த நிலையில் ஷகீரியர் நபீஸ் வந்தார். 9 ஓட்டங்களைப் பெற்ற இவர் மலிங்கவின் பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஸ்கோர் 106 ஐ எட்டுவதற்குள் 3 விக்கெட் டுக்களை இழந்து தவித்த பங்களாதேஷ் அணிக்கு ஹபிபுல் பஷார் - மொகமட் அஷ்ரபுல் ஜோடியின் இணைப்பாட்டம் ஓரளவு தெம்பைக் கொடுத்தது.

எனினும் கடந்த டெஸ்டில் சதமடித்துக் கலக் கிய மொகமட் அஷ்ரபுல் நேற்றைய ஆட்டத்தில் 24 ஓட்டங்களுடன் மலிங்கவால் போல்ட் செய் யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ச்சியாக பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுக்கள் சரிந்தபோதும் மறுபுறம் ஹபி புல் பஷார் நிதானமாக ஆடி அரைச் சதத்தைக் கடந்தார்.


அடுத்துக் களமிறங்கிய ரஹீம் 2 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். இந்த நிலையில் ஹபி புல் பஷாருடன் ஜோடி சேர்ந்தார் காலித் மசூத்.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஹபிபுல் பஷார் ஸ்கோர் 186 ஐ எட்டியபோது முரளிதர னின் பந்தை தரங்கவிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார். 120 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்களை எடுத்திருந்தார் ஹபிபுல் பஷார்.

அடுத்து காலித் மசூத்துடன் - மொகட் ரபீக் ஜோடி சேர்ந்தார். எனினும் காலித் மசூத் 47 பந்துகளில் 12 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்தை - சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமி ழந்தார். ஓரளவு சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மொகமட் ரபீக்கும் 57 பந்துகளில் 32 ஓட்டங்க ளைப் பெற்றிருந்தபோது பெர்னாண்டோவின் பந்தை - முரளிதரனிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

பின்னர் வந்த சதாத் ஹூசைன் 6, ரஷல் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இனாமுல் ஹக் ஜூனியர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கா மல் இருந்தார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில பங்களா தேஷ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.



பந்துவீச்சில் மலிங்க, பெர்னாண்டோ தலா 2, பண்டார 1, முரளிதரன் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

50 ஆவது தடவையாக ஒரே இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையை இந்தப் போட்டியில் முரளிதரன் படைத்தார்.

இதனையடுத்து நேற்று தனது முதலாவது இனிங்ஸில் ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வண்டோட் 0, பண்டார 2 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தனர். நேற்றைய ஆட்ட நேர முடிவில் தரங்க - சமரவீர ஜோடி களத்திலி ருந்தது.

# திருவடிநிலை மீனவர்களுக்கு கடற்படையினரால் அசௌகரியம்!

யாழ்ப்பாணம்

சுழிபுரம் - திருவடிநிலை பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் கடற்படையினரால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக யாழ். கடற்தொழிலாளர் சம்மேளனத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லுகின்ற போதும், தொழில் செய்து கொண்டிருக்கின்ற வேளையிலும், தொழில் முடிந்து வருகின்ற நேரங்களிலும் கடற்படையினரின் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

தொழில் முடிந்து வருகின்றபோது தீவிர உடற்சோதனைகளை மேற்கொள்ளும் கடற்படையினர் - பிடித்து வருகின்ற மீன்களையும் கீழே கொட்டி சோதனையிடுகின்றனர்.

இதனால் மீனை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

வலி.தென் மேற்கு கடற்தொழிலாளர்கள் கடற்தொழிலில் பகிஷ்கரிப்பு மேற்கொண்டபோது - கடற்படைத் தளபதியால் இனிமேல் தொழிலாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட மாட்டாது என உறுதிமொழி வழங்கப்பட்டது.

எனினும் கடற்படையினரது இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்வது குறித்து அந்தப் பிரதேச கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ)

# விவசாய போதனாசிரியரை நியமிக்குமாறு கோரிக்கை!

சுதுமலை

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கென ஓர் தனியான விவசாயப் போதனாசிரியரை நியமிக்குமாறு அந்தப் பகுதி விவசாய சம்மேளத்தினரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் -

எமது பிரதேச செயலர் பிரிவில் மிக நீண்ட காலமாக விவசாயப் போதனாசிரியர் ஒருவர் நிரந்தரமாக இல்லாமையால் விவசாயிகள் பலரும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இந்த விவசாயிகளின் கஷ்டங்களைக் கவனத்தில் எடுத்து எமது பகுதிக்கு நிரந்தர போதனாசிரியர் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கீரிமலை விவசாயப் போதனாசிரியர் திருமதி மணிவர்மன் இந்தப் பகுதியில் பதில் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (44)

# குருநகர் கடலில் அதிகளவு மீன்கள் பிடிபட்டன!

கொக்குவில்

யாழ்.குருநகர் பகுதி மீன்பிடிப் படகுகளில் சென்ற மீனவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை அதிகளவான மீன்கள் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆழ்கடல் தொழிலான நைலோன் வலைப் படகுகளுக்கே கட்டாப்பாரை மீன்கள் அதிகமாகப் பிடிபட்டன.

ஏறத்தாழ 50 ஆயிரம், 75 ஆயிரம், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கட்டாப்பாரை மீன்கள் ஒவ்வொரு படகுகளுக்கும் கிடைத்துள்ளது.

மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் குருநகர் மீனவர்களுக்கு இத்தகைய மீன்பிடி வருவாய் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (206)





வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட அறநெறிப் போட்டியில் பங்குபற்றிய மாலுசந்தி ஸ்ரீ பரமானந்தா ஆசிரம மாணவர்களின் 'அரிச்சந்திரா மயான காண்டம்' நாடகத்தின் ஒரு காட்சியையும் அறநெறிப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (து)

# சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடிவு

யாழ்ப்பாணம்

பொருட்களுக்கான விலைகள் அதிகரித்துள்ளதையடுத்து சுருட்டுத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உணவுப் பொருட்கள் உட்பட சகல பொருட்களுக்குமான விலை அதிகரிப்பை அடுத்து தம்மால் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாமல் இருப்பதாகவும், எனவே தமது சம்பளத்தை அதிகரிக்குமாறும் சுருட்டுத் தொழிலாளர்கள் வடமாநில சுருட்டுத்தயாரிப்பாளர் சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்படி கடந்த 2 ஆம் திகதி சங்கத்தின் கூட்டம் நடைபெற்றவேளை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆயிரம் சுருட்டுகள் சுற்றுவதற்கு 600 ரூபா கூலியாக வழங்குவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுருட்டுத் தொழிலாளர்களுக்கான கூலி அதிகரிப்பையடுத்து, இந்தத் திகதியிலிருந்து சகல தர சுருட்டுக்களின் விலைகளும் அதிகரிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்

இந்து கலாசார அலுவல் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் நடத்தும் ஆன்மீக தொடர் சொற்பொழிவு நாளை நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - ஆசிரிய ஆலோசகர் இரா. ஈஸ்வரன் 'அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்' என்ற பொருளில் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார்.

# அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டத்தை இந்த மாத முடிவுக்குள் நடத்த முடிவு!

ஆழியவளை

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் இந்த வருடத்துக்கான பொதுக் கூட்டங்களை இந்த மாதம் முடிவதற்குள் நடத்திமுடிக்கவேண்டுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போது பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட உணவுகள் வழங்கப்படவேண்டும்.

அத்துடன் சுற்றுநிருபத்துக்கு மாறாக செயற்படக்கூடாது எனவும் பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுக்கொண்டார். (122)

# யாழ். வலய மாணவர்களுக்கிடையே திருக்குறள் மனனப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்

யாழ். கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறள் தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

இதன்படி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கீழ்ப்பிரிவுகளுக்கான போட்டியில் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்கள் முதலாம் அதிகாரம் தொடக்கம் 24 ஆம் அதிகாரத்துக்கு மேல் 240 குறள்களுக்கு அதிகமாகக் கூறவேண்டும்.

மத்திய பிரிவுக்கான போட்டியில் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையுள்ள மாணவர்கள் முதலாம் அதிகாரம் தொடக்கம் 38 ஆம் அதிகாரத்துக்கு மேல் 380 குறள்களுக்கு அதிகமாகக் கூறவேண்டும்.

மேற்பிரிவுக்கான போட்டியில் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையுள்ள மாணவர்கள் முதலாம் அதிகாரம் தொடக்கம் 50 ஆம் அதிகாரம் வரை 500 குறள்களுக்கு அதிகமாகக் கூறவேண்டும்.

அதிமேற்பிரிவுக்கான போட்டியில் தரம் 12 தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்கள் முதலாம் அதிகாரம் தொடக்கம் 70 ஆம் அதிகாரம் வரையான 700 குறள்களுக்கு மேல் கூறவேண்டும்.

குறிப்பிட்ட பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட குறள்களில் கூடுதலான எண்ணிக்கையான குறள்களை மனனம் செய்து ஒப்புவிக்கும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவள்ளன.

# ஆனைக்கோட்டை யாவில் குளத்தை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

சுதுமலை

உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை யாவில் குளத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யாழ். மாவட்ட உதவி கமநல ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள யாவில் விவசாயக் குளம் இதுவரை காலமும் எந்த விதமான புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் அணைக்கட்டுகள் தூர்ந்தும், அழிந்தும் போயுள்ளன.

இதனால் யாவில் குளத்தில் போதியளவு நீர் தேங்கி நிற்பதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் உலக உணவுத்திட்டத்தின் கீழ் இந்த விவசாயக்குளத்தை புனரமைத்து உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (44)

# நீண்டகாலமாக திருத்தப்படாத வீதி

கொக்குவில்

வண்ணை வடமேற்கு, நாவலடி வீதி மிக நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருந்து வருகிறது.

இது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் இன்னமும் வீதி திருத்தப்படாமலேயே இருந்துவருகிறது.

வீதி போக்குவரத்துக்கு உதவாத அளவுக்கு பழுதடைந்து போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (206)

# குறைந்த வட்டியில் சுயதொழில் கடன்

யாழ்ப்பாணம்

குறைந்த வீத வட்டியில் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் சுயதொழில் கடன்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இலங்கை வங்கி 20 ஆயிரம் ரூபா தொடக்கம் 2 லட்சம் ரூபா வரையான சுயதொழில் கடன்கள் 8 வீத வட்டியில் வழங்கப்படுவதாக வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் சுயதொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனுமே இந்த சுயதொழில் கடன்களை 8 வீத வட்டியில் வழங்க தாம் முன்வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)

# தவக்காலச் சிந்தனை



ஆதியிலே சாகாவரம் பெற்ற மனிதன், சாவைச் சந்திக்கும் சாபம் பெற்றதன் காரணம் என்ன? நமது முதல் பெற்றோர் செய்த பாவத்தின் விளைவுதான் அது. அதனால் ஒருவருக்கு ஒருவர் துணையாக, இணையாக இருந்த நிலை மாறி பகையாளியாக உருவெடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியது. ஆதாம் தன் மனைவி மீது பழியைப் போட்டார். என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நானும் உண்டேன் என்று சொன்னான்.

ஆனால் அந்தப் பெண்ணோ - அந்தப் பாம்பு என்னை ஏமாற்றிவிட்டது. நானும் உண்டேன் என்று பாம்பின் மீது பழியைப் போட்டாள். பாவம் செய்தவர்கள் அதற்குரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது ஒருவர் மீது மற்றவர் பழி போடும் அவலநிலையை நாம் காண்கிறோம். இந்த அவலநிலை இன்றும் தொடர்கிறது. தங்கள் குற்றங்களை உணராது, ஏற்றுக்கொள்ளாது கடவுளையே நிந்திக்கும் அளவுக்கும், கடவுள் எனக்கு ஏன் இப்படிச செய்ய வேண்டும்? என்று வாதம் செய்கிறார்கள். தங்கள் தவறுகளைப் போலித்தனமாக நியாயப்படுத்துகிறார்கள். நாம் எப்படி தவறான நம் வழிகளை நியாயப்படுத்தினாலும் இறைவன் தம் எல்லையற்ற இரக்கத்தினால் எம்மை அணைப்பதற்கு காத்திருக்கிறார். எமது இதயக்கதவுகளைத் திறப்போம்.

மோ.தார்சீசியஸ்.

# கச்சதீவு செல்வோருக்கு விசேட படகுச் சேவை!

யாழ்ப்பாணம்

எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ளவுள்ள பக்தர்களுக்காக, குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களிலிருந்து விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 2 படகுகளையும், தனியார் 2 படகுகளையும் சேவையில் ஈடுபடுத்தவுள்ளனர். இதற்கு மேலதிகமாக 2 படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதேவேளை, கச்சதீவு ஆலய சுற்றாடலில் பக்தர்களின் வசதி கருதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் சுகாதார சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நெடுந்தீவு பிரதேசசபையால் தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கப்படும் நெடுந்தீவு [illegible]தவி அரசாங்க அதிபர் பணிமனை[illegible]லும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினராலும் ஆலய சுற்றாடலில் தற்காலிக கடைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடற்படையினர் குடிநீர் வசதியை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை கச்சதீவு உற்சவத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஆயிரம் பேரும், தமிழகத்திலிருந்து இருநூறு பேர் வரை வரக்கூடும் என தாம் எதிர்பார்ப்பதாக யாழ். செயலக வட்[illegible]ரங்கள் மேலும் தெரிவித்தன.




# மூளைத்திறன் வளர்ச்சிக்குகந்த வல்லாரையைப் பயிரிட்டுப் பயன் பெறுவோம்

ஞாபகசக்தியை வளர்த்துக் கொள்ளவும், படிப்பில் சிந்தனை ஊன்றி நிற்கவும் வல்லாரை சிறந்த தோர் உணவாகும். எனவே, கல்வி கற்கும் சிறார்களுக்கு அவசிய உணவாக இதனை ஊட்டப்படல் வேண்டும்.

தமது உடல் அழகின் மீது அக்கறை கொண்டவர்கள் தாம் இளமையுடன் திகழவும், தமது மேனியழகை விருத்தி செய்யவும் வல்லாரையைத் தமது உணவில் சேர்த்தல் அவசியமாகும்.

நித்திரையின்றி அல்லற்படும் முதியவர்கள் - ஆழ்ந்த நித்திரையை அனுபவிப்பதற்கும் வல்லாரையுணவு உதவிபுரிகிறது.

ஆயுர்வேத வைத்தியத்தில் பீனிசம், வலிப்பு மூளைக்கோளாறு சமிபாட்டுத் தொகுதியிலுள்ள புழுக்களால் ஏற்படும் நோய் போன்றவற்றுக்கு அருமருந்தாகவும் இது கணிக்கப்படுகிறது.

மேலும், வல்லாரைக்கு இதயத்தைப் பலப்படுத்தும், இரத்த அழுத்தத்தைச் சீர் செய்யும், மன அமைதியை உண்டாக்கும் ... உள்ளதாக ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதிகளவு இரும்புச் சத்துள்ள வல்லாரையை குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள், இளைஞர்கள், வளரிளம் பருவத்தினர், முதியோர் என்ற பேதமின்றி சகலரும் உணவாக்கிப் பல்வேறு பயன்களை அனுபவிக்க முடியும். எனவே, முழுக் குடும்பத்துக்கும் ஏற்ற வல்லாரையின் உற்பத்தி முறையை நோக்குவோம்.

**வல்லாரைச் செய்கை**

இன்று இலங்கையில் கீரை வகைகளிலேயே மிகவும் உயர் சந்தைக் கேள்விமானமுள்ள இலை மரக்கறி ... க இது கருதப்படுகிறது. இது நம் நாட்டின் எந்தப் பாகத்திலும் செய்கை பண்ணக் கூடிய ஒரு பயிராகும். உலர் வலயத்தில் சிறப்பான நீர் முகாமைத்துவத்தின் கீழ் சிறந்த விளைச்சலைப் பெறமுடியும். வீட்டுத் தோட்டங்களில் திட்டமிட்ட முறையில் பாத்தியொன்றிலோ அல்லது பூச்சாடியொன்றிலோ வல்லாரையைப் பயிரிடுவதன்மூலம், வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

**வர்க்கங்கள்**

அடிப்படையில் செடிவகை, கொடி வகை என இரண்டு வர்க்கங்கள் காணப்படுகின்றன.

**செடிவகை**

பல தாவரங்கள் பற்றையாக ஓர் இடத்தில் வளரும் ஒரு தாவரத்திலிருந்து 100 தொடக்கம் 130 இலைகள் வரை காணப்படும். இதன் இலைக்காம்பு நீளமாகக் காணப்படும். ஓரளவு பருமனான இலைகளையே இவற்றிலிருந்து விளைவாகப் பெறமுடியும்.

**கொடி வகை**

நடப்படட்ட நாற்றிலிருந்து பல கொடிகள் முளைத்து நான்கு திசையிலும் படரும். இதனால் தோட்டம் முழுவதையுமே ஒரு கால எல்லையினுள் ஆக்கிரமித்துக் கொள்ளும். கொடிவகை வல்லாரையை இலையின் பருமன் கொண்டு 3 வகையாகப் பாகுபடுத்துவர்.

அ) பெரிய இலை கொண்டவர்க்கம்.
ஆ) சிறிய இலை கொண்ட வர்க்கம்.
இ) மத்திய அளவு இலை கொண்ட வர்க்கம்.



**நடுகை**

*அ) நடுகைப் பொருள் தெரிவு -*

நோய் பீடைத் தாக்கமற்ற ஆரோக்கியமான படரிகளிலிருந்து ஓரளவு முதிர்ச்சியடைந்த நாற்றுக்கள் நடு கைக்காகத் தெரிவு செய்யப்படும்.

நாற்றுகளை நடுகைக்குத் தயார் படுத்தும் வகையில் 2-3 தினங்களின் முன் அந்த நாற்றுகளின் இலைகளைக் கத்தரித்து அகற்றுதல் சிறப்பாகும்.

*ஆ) நடுகை இடைவெளி-*

செடிவகையும், பெரிய இலை கொண்ட கொடிவகை வல்லாரையும் 20x20cm இடைவெளியிலும், ஏனைய கொடி வகை வல்லாரைகள் 15x15 cm இடைவெளியிலும் நடுகை செய்யப்படும்.

*(இ) நாற்று நடுகை -*

மணணானது நன்கு பண்படுத்தப்பட்டு போதிய ஈரலிப்பு வழங்கப்பட்டு, ஒரு நிலத்தில் 2 நாற்றுகள் வீதம் நடுகை செய்யப்படும்.

மாலை வேளைகளில் நாற்றுக்கள் நடுகை செய்வதும் வழக்கமாகும். உலர் பருவத்தில் நாற்றுக்கு நிழல் வழங்கல் இன்றியமையாதது.

**நிலம் பண்படுத்தல்**

வல்லாரை ஓர் ஆணிவேர் கொண்ட பயிராகும். இதன் ஆணிவேர் 20 -30 cm ஆழம் வரை நிலத்துக்குள் ஊடுருவக் கூடியது. எனவே, இங்கு நிலத்தைச் சிறந்த முறையில் பண்படுத்த வேண்டும். மண்ணை நன்றாக உழுது, கட்டிகளை உடைத்து, தூர்வையாக்கி, நிலத்தை மட்டுப் படுத்தி பாத்திகள் அமைக்கப்படும். செடிவகை வல்லாரை பொதுவாக 1m அகலம் கொண்ட பாத்திகள்வடிவமைக்கப்பட்டு நடுகை செய்யப்படும்.

**பசளையிடல்**

வல்லாரைக்கு சேதனைப் பசளைகளும், சேதனப் பசளைகளும் இடப்படலாம். பொதுவாக வீட்டுத்தோட்டங்களில் சேதனப்பசளையிடலே விரும்பப்படுகிறது. சேதனைப் பசளையாக உக்கிய சாணம், கோழியெரு, கூட்டெரு, உக்கிய இலை, குழை என்பன இடப்படலாம். இவற்றை நடுகை செய்ய ஒரு வாரத்தின்முன்பே மண்ணுக்குள் இட்டு நன்கு கலந்துவிடல் வேண்டும். ஒவ்வொரு தடவையும் இலைகள் அறுவடை செய்தபின் உகந்தளவு சேதனைப்பசளையிடல் சிறந்த விளைச்சலைத் தரும்.

(தொடரும்...)

# நன்னீர் மீன் வளர்ப்பு

இலங்கையின் மொத்த நிலப் பரப்பு 65 610 சதுர கிலோ மீற்றராகும். இதில் சிறியதும் பெரியதுமாக 10 ஆயிரம் குளங்கள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் பண்டைய மன்னர்களால் விவசாய நோக்கத்துக்காகக் கட்டப்பட்டவையாகும். இவற்றுள் அநேகமானவை



மழை நீரினாலேயே நிரப்பப்படுவதால், வருடம் முழுவதும் நீர் தேங்கிக் காணப்படுவதில்லை. எனினும் - அருவிகள், ஆறுகள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் நீரால் ஒரு குறிப்பிட்ட தொகைக் குளங்கள் நிரப்பப்படுவதால் இவற்றுள் நீர் வற்றாது வருடம் முழுவதும் தொடர்ந்து இருக்கின்றது.

இலங்கை வாழ் மக்கள் புரத போஷணைக் குறைபாட்டை எதிர் நோக்குகிறது என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். இந்த நிலைமை எமது சமூக கலாசார முறைக்கேற்ற வகையில் நிரந்தரமாகத் தீர்க்கப் படவேண்டும். கிராமப் புறங்களில் வாழும் இந்துக் களும், பௌத்தர்களும் மாட்டிறைச்சியை உண்பதில்லை. எனவே, இலங்கையில் முக்கியமான புரதப் போசனைப் பொருட்களில் முதலிடம் வகிப்பது மீன் ஆகும்.

சிறிய, பெரிய நீர்த்தேக்கங்கள் அனைத்தும் கிராமப் புறங்களிலேயே அமைந்துள்ளன. எனவே, இந்த நீர்த் தேக்கங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதால், கிராம மக்களுக்குத் தேவையான மீனை நியாய விலையில் அவர்களின் வீட்டு வாசலில் வழங்கக் கூடியதாக இருக்கும்.

முன்னைய காலத்தில் தற்போதைய பிரச்சினைகள் இல்லாததால் பண்டைய மக்கள் மீன் வளர்ப்பில் போதிய கவனம் செலுத்தவில்லை. ஆனால், தற்பொழுது மீன் வளர்ப்பு பொருத்தமானது மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் உள்ளது.

உலகில் சராசரியாக வருடமொன்றுக்கு ஒருவர் உட்கொள்ளும் மீனின் அளவு 10 கிலோ கிராமாகும். கடல் மீனின் விலை உயர்வாக இருப்பதாலும், போக்குவரத்து வசதிகளும், சேமித்து வைக்கும் வசதிகளும் இல்லாததாலும், இலங்கையின் உட்பிரதேசங்களுக்கு மீனைக் கொண்டு செல்வது சிரமமாக உள்ளதும் அனைவரும் அறிந்ததொன்றாகும்.

இதற்குத் தீர்வு நன்னீரில் மீன் வளர்ப்பதுதான். இரு முக்கிய வகையான நன்னீர் வளர்ப்பு முறைகள் நடைமுறையிலுள்ளன.

1. இயற்கையாகவே உள்ள நன்னீர் குளங்களில் மீன்கள், கணவாய் மீன், அல்காக்கள் போன்றவற்றைப் பிடித்து அவற்றை இயற்கையாக இனம் பெருக்கி, நன்னீர் மீன் வளர்ப்புக்கு உபயோகித்தல்.

2. சிறிய நன்னீர் குளங்களில் அவற்றைச் செயற்கை முறையில் இனம் பெருக்கி, வளர்த்து அவற்றை மீன் வளர்ப்புக்கு உபயோகித்தல்.

நன்னீர் மீன், கருவாடு ஆகியவை எமது நாளாந்த உணவில் முக்கியத்துவம் பெற்று, நாள்தோறும் பிரபல்யம் அடைந்து கொண்டு வருகிறது.

இது வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்க உதவுவதுடன், கடல் மீன் ஏற்றுமதியை அதிகரிக்கவும் உதவும். கடல் மீனுக்குப் பொருத்தமான பிரதியீடாக எமது மக்கள் இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், இது தோல்வி அடையுமா? நிச்சயமாக இல்லை. ஏனெனில், இவற்றிலிருந்து விலங்குணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

இவை தாவர வளர்ச்சிக்குத் தேவையான அதிகளவு நைதரசனையும், மற்றைய பெரும்பாக சுவட்டு மூலங்களையும் கொண்டுள்ளதால், இவற்றிலிருந்து பசளைகள் தயாரிக்கலாம். எனவே, நன்னீர் மீன் வளர்ப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கை வகிப்பதால், தேசிய பொருளாதாரத்தில் இதற்கு ஒரு சிறந்த இடம் உள்ளது.


**நன்மைகள்**

விவசாய அபிவிருத்திக்கு நீரைப் பாதுகாத்தல் அவசியமாகும். எனவே, அதிகளவு நிலத்தில் நன்னீர் குளங்கள், அருவிகள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் போன்றவை அமைக்கப்பட வேண்டும். நன்னீர் மீன் வளர்ப்பின் மூலம் இத்தகைய நிலத்திலிருந்து நிலையான வருமானத்தைப் பெறலாம். மீன் - நீரிலுள்ள கழிவுப் பொருட்களையும், உயிரினங்களையும் அதிகளவில் உண்பதால் களை வளர்ச்சியைத் தடுத்து, சுத்தத்தையும், இயற்கை அழகையும் பேணுவதற்கு உதவும்.


குளங்கள் - நெல் வயலின் மத்தியில் அமைந்துள்ளபோதும், குளத்தின் அடியில் படியும் வண்டல் சிறந்த பசளையாகப் பாவிக்கப்படலாம். தனியே விலங்கு வேளாண்மையை மேற்கொள்வதைவிட அதை மீன் வளர்ப்புடன் ஒன்றிணைத்து மேற்கொள்வது மிகுந்த நன்மை பயக்கும். கோழியையும், வீட்டு வளர்ப்பு மிருகங்களையும்விட, மீனின் உணவு மாற்றுவிகிதம் அதிகமாகும். உதாரணம் - "கிறாஸ்" எனப்படும் மீன் ஒரு கிலோ தசையை உண்டாக்க அதற்கு ஏறக்குறைய 20 கிலோ கிராம் நல்ல தரமான வெட்டுப்புல் தேவை. மாடு என்றால் அதற்கு 40 கிலோ கிராமுக்கு அதிகமான நல்ல தரமான புல் தேவை.

(தொடரும்...)

# விதைகளைச் சந்தைப்படுத்தல்



விதைகள், உரம், கிருமிநாசினி, உள்ளீடுகள், இயந்திர வர்க்கம் ஆகியன உரிய நேரங்களில் கிடைக்கும் பட்சத்திலேயே கமக்காரர்கள் தமது கமச் செய்கையை சரிவரச் செய்யக்கூடியதாகவிருக்கும். அத்துடன் இவை நியாயமான விலைக்கும் கிடைக்க வேண்டும். இவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டிய பங்கு சந்தைப்படுத்தல் முகவர் தாபனங்களையே சார்ந்தது.



சந்தைப்படுத்தல் என்னும்போது உற்பத்தியில் இருந்து பாவனை வரையிலான சகல நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. விதை சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் சிறந்த, தரம் மிக்க விதைகளை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்குவது முக்கியமாகும்.

விவசாயிகள், பல நூற்றாண்டு காலமாகத் தமது விதைகளை அல்லது அயலவர்களின் விதைகளை உபயோகித்தனர். இந்த முறையால் அவர்களுக்கு விதைகள் உரியநேரத்தில் கிடைத்தன. பணத்தை முதலீடு செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக விவசாய உற்பத்தித் தேக்கம் அடையும் ஒரு நிலைதான் ஏற்பட்டது. திருந்திய, சிறந்த ரக விதைகளைப் பாவித்து, விளைச்சலை அதிகரிக்காமையே இந்த நிலைமை ஏற்பட்டதற்கான முக்கிய காரணமாகும். இதனை மாற்றியமைக்கும் முகமாக திருந்திய, சிறந்த ரக விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை கமக்கார்களுக்கு வழங்கும் பல திட்டங்கள் தீட்டப்பட்டன.



விதைகளைக் கமக்காரர்களுக்கு வழங்குவதற்குப் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என அறியப்பட்டுள்ளது -

1. அடிப்படை விதைகளை விதை வளர்ப்போருக்கு விநியோகித்தல் அல்லது விற்பனை செய்தல்.
2. விதை வளர்ப்போர்களிடமிருந்து விளைந்தவுடன் கிடைக்கும் விதைகளைச் சேகரித்தல்.
3. இந்த விதைகளைப் பெறுமதிமிக்க பயிர் உற்பத்தி உள்ளீடாக மாற்றியமைத்தல்.
4. களஞ்சியப்படுத்தல்
5. விற்பனை செய்தல் (விலை நிர்ணயம் உட்பட)
6. குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப விதைகளைக் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்தல்.
7. பொருத்தமான இடத்தில் விவசாயிகளுக்கு விதைகளை வழங்குதல்.
8. உற்பத்தியைத் திருத்தியமைப்பதற்கு விதை உற்பத்தியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஆலோசனை கூறுதல்.

விதைகளை சந்தைப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் விவசாய, வர்த்தக அறிவை பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், விவசாயிகளின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதையும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

# சட்டரீதியற்றதெனக் கூறிய உடன்பாட்டை நடைமுறைப்படுத்த உடன்பட்டது ஏன்?

**விடுதலைப் புலிகளுக்கு எதிராக - அரசாங்கத்தின் இராணுவ, அரசியல் நகர்வுகள் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை முன்வைத்து - லங்காதீப பத்திரிகையின் 02.03.2006 இதழில் லெப்.கேணல் சுசந்த செனவிரட்ண என்ற முன்னாள் இராணுவ அதிகாரி எழுதியுள்ள கட்டுரையின் மொழியாக்கம்.**

**-தமிழில் வல்வையூரான்.**

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையே மேலுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது. அரசின் சமாதானப் பேச்சுக் குழுவுக்குத் தலைவராக நிமால் சிறிபால டீ சில்வா தலைமை ஏற்றிருந்தார். விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத் தலைமையை இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏற்றிருந்தார். பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது. எனவே, எதிர்வரும் கால நடவடிக்கை என்ன என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய பொருத்தமான வேளை இதுவாகும்.

போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாகவே இரண்டு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தின. ஆரம்பத்தில் அரசாங்கம் அறிக்கை வெளியிட்டு, அதில் நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் சட்ட ரீதியற்றது என குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும் இறுதியில் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அதே விதமாக அமுல் படுத்துவதற்கு இரண்டு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை தயாரிப்பதில் தலைமையேற்றது நோர்வே அரசாங்கம். பேச்சுவார்த்தையில் கருத்துக்களைத் தெரிவித்த நோர்வே பிரதிநிதிகள் இது குற்றம், குறைகள் இல்லாத உயர்ந்த ஆவணமென தெரிவித்தனர். இந்தவேளை நிகழ்ந்தவற்றை மீட்டுப்பார்ப்போம்.

போர்நிறுத்த உடன்படிக்கையை திருத்தும் நோக்குடனேயே அரசாங்கம் ஜெனிவா நோக்கிச் சென்றது. ஆனால், உடன்படிக்கையில் எந்தவித திருத்தங்களையும் மேற்கொள்ளாமல் அதனை அவ்வாறே நடைமுறைப் படுத்துவதென்ற இணக்கப்பாட்டுடனேயே திரும்பி வந்தனர். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கம், போர்நிறுத்தத்தை பலமுள்ளதாக்குவதே எனப் பேச்சுக்குழுவில் பங்கு கொண்ட அரசதரப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

போர் நிறுத்தத்தை பலமுள்ளதாக்குவது என்பதன் மூலம் கருதுவது எதனை? அவ்வாறு போர்நிறுத்தத்தை பலமுள்ளதாக்குவதற்கு ஜெனிவாவுக்குச் சென்றிருந்தால் அந்த ஒப்பந்தம் சட்டரீதியற்றதென முதலில் தமது கருத்தை வெளியிட்டது ஏன்? முதலில் போர் நிறுத்த உடன்படிக்கை சட்டரீதியற்றதெனத் தெரிவித்துவிட்டு, அதனை வரிக்குவரி நடைமுறைப் படுத்துவதற்கு உடன்பட்டது ஏன்? என்பது பிரச்சினையாகும்.

இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கே நீண்டகால அனுகூலம் கிடைத்துள்ளது. சர்வதேச சமூகத்தில் ஏதோவொரு நிலைப்பாட்டை கட்டியெழுப்பும் மார்க்கமாக ஜெனிவா பேச்சு மேசையைப் பயன்படுத்த அவர்களுக்கு முடிந்தது.

இதுவரை விடுதலைப் புலிகள் தமது பிரதான யுத்த செயற்பாடுகளில் அரைப் பகுதிக்கு வந்துவிட்டனர். எனவே, எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் - விடுதலைப் புலிகள் சட்டபூர்வமானவற்றைக் கைப்பற்றும் நோக்கங்களோடு தமது நடவடிக்கைகளை எடுப்பார்கள். அத்துடன் சர்வதேசத்தின் அங்கீகாரத்துக்கான பின்னணியையும் ஏற்படுத்தியுள்ளனர்.

அந்த நோக்கத்தை அடைவதற்காகவே விடுதலைப் புலிகள் உலகின் முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்தனர். ஏப்ரல் மாதம் இந்தப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் சுற்றுக்குச் செல்லவுள்ள விடுதலைப் புலிகள்- அங்கு போர்நிறுத்த உடன் படிக்கையிலுள்ள சிக்கலான விடயங்கள் குறித்து பேசவுள்ளதாக மறைமுகமாகத் தெரிவித்துள்ளனர்.



போர்நிறுத்த உடன்படிக்கையைத் திருத்துவதற்கு விடுதலைப் புலிகள் உடன்பட்டாலும், நோர்வே பிரதிநிதிகள் உடன்படமாட்டார்கள். ஏனெனில், அதனைத் திருத்துவதனால் அவர்கள் அவமானத்துக்குட்படுவர். எனவே, அவர்கள் தொடர்ந்தும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை உயர்ந்த ஆவணமெனக் கூறுகின்றனர்.

எனினும், போர் நிறுத்த உடன் படிக்கையைத் திருத்த வேண்டுமெனில், அரசாங்கம் செய்ய வேண்டியது என்ன? இந்தத் திருத்தம் முன் வைக்கப்படுவது தனியே அரசாங்கம் மட்டும் அனுகூலத்தைப் பெறும் நோக்கம் அல்லவெனவும். அந்த ஆவணத்துடன் தொடர்புடைய சட்ட பூர்வத் தன்மையை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனானது என்பதையும் வலியுறுத்தவேண்டும்.

உதாரணமாக - போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அடங்கியிராத சொற்கள் அதில் அடங்கியுள்ளன. Line of control என்பது சர்வதேச எல்லையை காண்பிக்கும் ஒரு சொல்லாகும். எனவே, இங்கு இருநாடுகள் இல்லாத காரணத்தால் அது போன்ற ஒரு சொல்லைப் பாவிப்பது தவறாகும்.

போர் நிறுத்த செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்காக இந்த விடயங்கள் சம்பந்தப்பட்டவையல்ல. ஆனால், அது எதிர்காலத்தில் இரண்டு நாடுகளை உருவாக்குவதற்கு வசதிகளை வழங்கும் சட்ட பூர்வமான ஆவணமாகலாம். இந்தச் சொல்லை முன்னெடுப்பதன் மூலம், பாதுகாப்புக்கென உள்ளவர்கள் அழிவுக்குள்ளாவது நிகழும். அதுபோன்ற சட்டபூர்வமான பல்வேறு சொற்கள் உள்ளன.

இனப்பிரச்சினை மற்றுமொரு உதாரணமாகும். இதனால் சர்வதேச சமூகம் இலங்கையில் இனங் களுக்கிடையில் நிலவுகின்ற பிரச்சினை என விளங்கிக்கொள்ளும். அதனால் பொஸ்னியாவில் இடம்பெற்ற சண்டைக்குச் சமமாகச் சமப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

பொஸ்னியர்களும், சேர்பியர்களும் போல இலங்கையர்களும் மோதிக்கொள்வதாக நினைப்பார்கள். இல்லையெனில் ருவண்டாவில் நிகழ்ந்த டுட்சி மற்றும் ஹூட்டு இனத்தவர்களிடையே நிகழ்ந்த மோதலுடன் சமப்படுத்துவதற்கு முயற்சி எடுப்பார்கள். அது மனிதக் கொலை மோதலாகும். அது போன்ற நிலைமை, விடுதலைப் போராளிகளுக்கு சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுத்தரும். இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் அவ்வாறானதொரு நிலை இல்லை.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப் பாவிக்கப்படுவது சட்ட பூர்வமானதாகிவிடும். இது போன்ற சட்டபூர்வமான ஆவணங்களைத் தயாரிக்கும்போது சொற்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு துறையிலும் சம்பந்தப்பட்ட பாவனைச் சொற்கள் உள்ளன. மருத்துவ, பொறியியல், சட்ட, பாதுகாப்புத்துறைகளில் அவ்வாறான சொற்கள் உள்ளன. அது குறித்து உரிய புரிந்துணர்வுடன், உரிய இடத்தில் உரிய விதமாகப் பாவிக்கவேண்டும். போர்நிறுத்த உடன்படிக்கையில் பயணம் செய்யும் சுதந்திரம் என்ற தலைப்பின் கீழுள்ள சரத்துக்களில் பாரதூரமான நிலைமையுள்ளது. அத்துடன்- 2, 3ஆம் சரத்துக்களில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்துக்காகப் பயணம் செய்யும் சுதந்திரம் என்ற தலைப்பின் ஊடாகப் பல சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் போர்நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புட்டவை அல்ல. இதுபோன்ற விடயங்கள் குறித்து உடன்பாட்டை இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தையின் மூலமே கட்டியெழுப்ப முடியும். அதுவும் ஏதாவது ஒரு சட்ட ரீதியான தன்மையோடு கூடிய ஒன்றாகும்.

முதலில் அரசியல் யாப்பு போன்ற பாரதூரமான தலைப்புக்களைக் கவனத்தில் எடுக்க வேண்டியதில்லை. மக்களது இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புகின்ற விடயங்கள் குறித்து உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதன் மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். அப்பொழுது கடுமையான நிலைப் பாடுகளில் இல்லாது தீர்வு நோக்கிச் செல்ல முடியும். இந்தப் பிரிவை நோர்வே பிரதிநிதிகள் உடன்பாட்டில் தெரியாமலேயே சேர்த்துக்கொண்டார்களா? அல்லது விடுதலைப் புலிகளது ஆலோசனையின்படி தயாரித்தார்களா? என்ற சிக்கல் எழுகின்றது.

இதன் சரத்துக்களை உடன்பாட்டுக்கு எடுக்கும்போது இறுதிப் பெறுபேறாக இராணுவ முகாம்கள் வரையறை செய்யப்படும். ஏன் அந்தக் கருத்துக்களுக்கமைய உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச கட்டடங்களிலிருந்து இராணுவம் விலகநேரிடும். முக்கிய நோக்கம் யுத்தத்தை நிறுத்துவதெனில், அதற்குப் பொதுமக்களது நிர்வாகம், மத, கலாசார, பொருளாதார, சமூகம் ஆகிய விடயங்கள் எவையும் உட்படுத்தப்படக்கூடாது.

அது தனியே படையினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையே நடைபெறும் கொடுக்கல், வாங்கல்களாகும். இதற்காகப் பொலிஸ் மற்றும் இராணுவத்துக்குள் பெற்றுக்கொள்ளும் ஆலோசனைக்கமைய ஒப்பந்த வரைபுப் பிரதி தயாரிக்கப்படவேண்டும். அதில் விடுதலைப் புலிகளின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு ஒப்பமிடப்படவேண்டும். (தொடரும்...)

## நிகழ்வின் நிழல்கள்...



மாதகல் புனித லூர்த்து அன்னை பெருவிழா அண்மையில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்றபோது, யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருப்பலி ஒப்புக் கொடுப்பதைப் படத்தில் காணலாம். (ஙி)



பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது வடமராட்சி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் கோட்டக் கல்வி அலுவலர் பா.இரகுநாதனையும் படத்தில் காணலாம். (122)




தமிழ்ச் செய்தித் தகவல் மையத்துக்கு மானிப்பாய் றோட்டறக் கழகத்தினரால் ஒரு தொகுதி கணினி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கழகப் பிரதிநிதி எஸ்.கீதாஞ்சலி தமிழ் செய்தி தகவல் மையத்தைத் சேர்ந்த போஷர் எஸ்.ஜே.கணநாதனிடம் கணினித் தொகுதியைக்கையளிப்பதைப் படத்தில் காணலாம்.



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கைதடி, நாவற்குழி தெற்குப் பிரதேச கடற்தொழிலாளர்களுக்குக் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் - யாழ்.மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் மீனவர் ஒருவருக்கு வலைத்தொகுதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (த)




யாழ்.லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் -அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு (''சொண்ட்'') என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் - இளையோர் செயலணியால் வீதி விபத்துத் தொடர்பான விழிப்புணர்வு யாழ். வேம்படிச் சந்தியில் நடத்தப்பட்டது. இதில் விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்கள், விபத்துக்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு விழிப்புணர்வுகளை மேற்கொண்டதுடன், அந்த வீதியால் சென்ற பாதசாரிகளுக்கும், வாகனச் சாரதிகளுக்கும் விபத்து விழிப்புணர்வு தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுமானத் துறையில் ஈடுபடுபவர் விபரங்கள் கட்டுமான பொறியியல் செயலகத்தால் சேகரிப்பு !

கல்மடு —

தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டுமானத்துறையில் ஈடுபடுவோரை இனங்கண்டு மேம்படுத்தும் செயற்பாடுகளில் தமிழீழ கட்டுமான பொறியியல் செயலகம் ஈடுபட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் கட்டுமானத் துறையில் வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கும் சகல தொழிலாளர்களையும் தொழிற் பதிவுக்குட்படுத்தும் செயற்திட்டம் குறித்து செயலகம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழிலாளர் தொழிற்துறை பதிவுச் செயற்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை கட்டடத் தொழிற்துறை தொழிலாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தொழிலாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டியவை -

அந்த பகுதியிலுள்ள மனிதவள அலுவலகங்களுக்குச் சென்று அவர்களின் வரலாற்றுக் குறிப்புப் படிவத்தைப் பெற்று விபரங்கள் யாவற்றையும் தெளிவான கையெழுத்தில் கேட்கப்படும் விடயங்களுக்கு அமைவாக பூர்த்தி செய்து அவ்வப்பகுதி செயலகங்களிலேயே கையளிக்குமாறும் வேண்டப்படுகின்றனர்.

இதன்போது ஏற்படும் சந்தேகங்களை உங்களுடைய பகுதி மனிதவள அலுவலரை நாடி சீர் செய்து கொள்ளலாம் எனவும், பதிவுப் படிவங்களை நிரப்பிக் கையளிக்கும் போது அவர்களுக்கான பதிவு எண் வழங்கப்படும் எனவும் அதனை தவறாது பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு நடவடிக்கைகள் யாவும் கிளிநொச்சி, விஸ்வமடு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய பிரதேசங்களுக்கான தொழிலாளர் பதிவுச் செயற்பாடுகள் குறித்த விபரம் தொடர்ச்சியாக அறிவியத்தரப்படும்.

## உதைபந்தாட்டப் போட்டி

அக்கராயன் —

அக்கராயன் பிரதேச மாவீரர் நினைவாக ஸ்கந்தா விளையாட்டு கழகம் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கழகங்கள் இணைந்து இந்தப் போட்டியை நடத்தவுள்ளன.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தலைவர், விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம், புதுக்குடியிருப்பு அல்லது இத்தியடி அம்மன் அரிசிஆலை, ஸ்கந்தபுரம் ஆகிய முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும். (09)

## கல்மடு நகர் கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இராமநாதபுரம் —

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் அண்மையில் இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இ.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கண்டாவளை பிரதேச கிராம அபவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர், வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் செயலாளர் அறிக்கை, பொருளாளர் கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டன. இதனையடுத்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக இ.யோகநாதன், செயலாளராக அ.அன்ரனிராஜ், பொருளாளராக சி.சிவச்செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக க.கமலாம்பிகை, செயலாளர் பூ.விஜயராணி, பொருளாளர் சி.சுமதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)







பூநகரி - மட்டுவில் நாடு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டப திறப்பு விழா நிகழ்வில் - பொது மண்டபத்தின் பெயர்ப் பலகையை சமூக அபிவிருத்தித் திட்ட உத்தியோகத்தர் திலீபன் திரைநீக்கம் செய்து வைப்பதையும் , மண்டபத்தை பூநகரி உதவி அரசாங்க அதிபர் சிறிஸ்கந்தகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், பொதுநோக்கு மண்டபத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# இரணைமடுக்குளத்தைப் புனரமைக்க மேலும் 3500 மில்லியன் ரூபா தேவை!

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி —

கிளிநொச்சி - இரணைமடுக் குளம் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 4ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமிடத்து உதவி அமைப்புக்கள் ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை மட்டும் புனரமைப்புப் பணிக்கு ஒதுக்கியுள்ளன என கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையிலுள்ள இரணைமடுக்குளத்தை புனரமைப்புச் செய்வதற்கென நியாப் திட்டக் குழுவினர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் - இரணைமடுக் குளத்தை முழுமையாக புனரமைப்பதற்கு 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் உதவி வழங்கும் அமைப்புக்களிடம் - இரணைமடுக் குளத்தின் முக்கியத்துவம் குறித்தும் புனரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துக் கூறியதுடன் அதற்கான நிதியுதவியை வழங்கும் வண்ணம் கோரிக்கை விடுத்த பொழுதிலும் - உதவி வழங்கும் அமைப்புக்கள் ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை மட்டுமே ஒதுக்கியுள்ளனர் எனவும், இதன் காரணமாக இந்த நிதியைக் கொண்டு இரணைமடுக்குளத்தின் முக்கிய புனரமைப்புப்பணிகளை மட்டுமே மேற்கொள்ளமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (09)

## சுமன் பயிற்சி பாசறையில் பயிற்சியின் நிறைவு விழா

முழங்காவில் —

லெப்டினன்ட் கேணல் சுமன் மக்கள் கட்டுமானப் பயிற்சியணிக்கான பயிற்சி நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பயிற்சியாசிரியர் யாழ்நம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பயிற்சியாசிரியர் மதிவேந்தன் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை தளபதி மகேந்தி ஏற்றிவைத்தார். லெப்டினன்ட் கேணல் சுமனின் திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை முழங்காவில் பிரதேச காவல் துறைப் பணிமனைப் பொறுப்பாளர் லோகேஸ் ஏற்றிவைக்க, மலர்மாலையை கள்ளியடிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் அணிவித்தார். இந்த நிகழ்வின் சிறப்புரைகளை தளபதி மகேந்தி நிகழ்த்தினார். (பூ)

## வவுனியா நகர சபை மண்டபத்தில் இளந்தளிர் இனியாலய நிகழ்வு

வவுனியா —

தேசிய சிறுவர் ஆண்டை முன்னிட்டு இளந்தளிர் இனியாலயம் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சண்முகம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வடக்கு - கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் சிறிதேவி ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் வவுனியா நிருத்தி நிகேதன நுண்கலைக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா அருளகம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (03)

## சிங்கள-முஸ்லிம் மாணவர்களை விடுதலைப்புலிகள் அச்சுறுத்தவில்லை

### மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

வவுனியா —

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது பொய் என்று வர்த்தகத் துறை மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளதாவது-

வவுனியா வளாகத்திலிருந்து அண்மையில் வெளியேறிய சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அனைத்துமே ஆதாரமற்றவை. கல்வித்துறை அதிகாரிகளையும், பொதுமக்களையும் தவறான தகவல்கள் மூலம் திசை திருப்புகின்றனர்.

இங்கு கல்விச் செயற்பாடுகள் எதுவித பாதிப்பும் இல்லாமல் தொடர்ந்து நடைபெறுகிறது.

அவர்களுக்கு வவுனியா வளாகத்தில் எதுவித அச்சுறுத்தலும் இல்லை. என்பதுதான் உண்மை என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்பதற்குத் தடை

கிளிநொச்சி —

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டடங்கள் அமைப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என கரைச்சிப் பிரதேசசபை அறிவித்துள்ளது.

இதனை மீறி கட்டடங்கள் அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்கள் இடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கரைச்சிப் பிரதேச சபையினரால் அறிவிக்கப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல் ஏற்றுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது குற்றப் பணம் அறவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சிப் பிரதேசசபை தெரிவித்துள்ளது. (09)

## அங்குரார்ப்பணமும் ஆலோசனைக் கூட்டமும்

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்ட புதிய வைத்தியசாலை அங்குரார்ப்பணமும் அபிவிருத்தியும் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏ-9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி என்னும் முகவரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (09)

## தமிழீழ விளையாட்டுத் துறையினரால் துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி

கிளிநொச்சி —

தமிழீழ விளையாட்டுத்துறையால் துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது.

விளையாட்டுத்துறை செயலாளர் அன்ரன் அன்பழகன் தலைமையில் ஆரம்பமான இந்தப் பயிற்சி வகுப்பு - வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் , பயிற்சியின் நிறைவில் தமிழீழ விளையாட்டுத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சைக்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கபபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியின் ஆசிரியராக தமிழீழ விளையாட்டுத்துறை தலைவர் பத்மநாதன் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு
காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு - திருக்குறள்

## நமது நோக்கு

# மீண்டும் கொக்கரிப்பு

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக - சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வே அரசாங்கத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்று ஜே.வி.பி. கொக்கரித்திருக்கிறது.

அதுபோலவே - இனிமேல் கொழும்புக்கு வெளியே பேச்சுக்கள் நடைபெறக்கூடாது என ஜாதிகஹெல உறுமயவும் அரசுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ஒரு நாட்டில் உயர்ந்தபட்ச அதிகாரம் படைத்த அரசாங்கத்தையே - ஆட்டிப் படைத்து உத்தரவு போடும் அளவுக்கு இந்த இரண்டு சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

இவர்களின் இந்த வளர்ச்சிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்பது ஒரு புறமிருக்க - இந்த இரண்டு கட்சிகளதும் வலியுறுத்தல்கள், அடுத்த கட்டப் பேச்சுக்களைக் குழப்புகின்ற திட்டத்தோடுதான் இருப்பதை உணர முடிகிறது.

நோர்வே அரசாங்கத்தை அனுசரணைப் பணியில் இருந்து நீக்கவேண்டும் என்பதற்கு இவர்கள் வழமையாகக் கூறும் காரணம் - அவர்கள் புலிகள் சார்பாகச் செயற்படுகின்றார்கள். 'வெள்ளைப் புலிகள்' என்பதுவேயாகும்.

சமாதான அனுசரணையாளர் என்ற வகையில் இரண்டு தரப்புடனும் சமவாய்ப்புடன் தொடர்புகளை வைத்திருக்க வேண்டியது நோர்வேயின் பொறுப்பு.

ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு பயணத்தடை விதித்தாலும் - நோர்வே அவர்களை தமது நாட்டுக்கு அழைத்துக் கௌரவப்படுத்தியதை இந்த சிங்கள பேரினவாத சக்திகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இதனால்தான் இவர்கள் இப்போது மீண்டும் எகிறிக் குதிக்க ஆரம்பித்துள்ளனர். ஒஸ்லோவில் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - கடைசியில் அதைவிட முக்கியத்துவம் மிக்க ஜெனீவாவுக்கு பேச்சு மேசையை நகர்த்தியதன் விளைவை இப்போதுதான் சிங்களப் பேரினவாதிகள் உணர்கின்றனர்.

ஐரோப்பாவில் புலிகளுக்குக் கிடைத்த முக்கியத்துவமும், அங்கீகாரமும் இவர்களுக்கு தமது பிரசாரம் பொய்யாகிவிடும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்திருந்தது.

அதனால்தான் - இனிமேல் கொழும்பிலேயே பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என ஹெல உறுமய வற்புறுத்தியிருக்கிறது. இலங்கையை விட்டு இந்தப் பிரச்சினை வெளியே சென்றால் அது சர்வதேச மயப்படுத்தப்பட்டுவிடும்.

பேச்சுக்கள் சர்வதேச மயப்படுத்தப்பட்டால் அது தமிழர் தரப்புக்கே வாய்ப்பாகிவிடும். அவர்கள் பக்கத்தில்தான் நீதியும், நியாயமும் உள்ளதென்ற அச்சம் இவர்களுக்கு உள்ளூர இருக்கிறது. இதனால்தான் மீண்டும் கொழும்பில் பேசவேண்டும் எனக் கூறி வருகின்றனர்.

இதேவேளை நோர்வே - கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பதவியில் இருந்து விலகி சுவீடனிடம் கையளித்ததையும் கூட இவர்களால் பொறுக்க முடியாது இருக்கிறது.

சுவீடன் ஒரு ஐரோப்பிய ஒன்றிய நாடாம். அங்கு புலிகளுக்குப் பயணத்தடை விதித்திருக்கும் நிலையில் சுவீடன் நாட்டவர் கண்காணிப்புக் குழுவுக்கு தலைமையேற்றால் - அது எதிர்காலத்தில் இந்தத் தடையை விலகுவதற்குக் காரணமாகிவிடுமாம்.


இதுதான் சிங்கள தேசியவாத சக்திகள் கூறுகின்ற காரணம். சர்வதேச ரீதியில் புலிகள் பலம்பெற்று விடுவார்களோ, தமிழ் மக்களின் உரிமைகளை கொடுத்து விட வேண்டிய நிலை வந்து விடுமோ என்ற பயம் இவர்களுக்கு இருக்கிறது.

இதனால்தான் மார்க்சிசம் பேசும், ஜே.வி.பி ஒரு நவ காலனித்துவ சக்தியாக மாற்றம் கண்டிருக்கிறது. தமிழரின் உரிமைப் போராட்டத்தின் மீதான நியாயப்பாடுகள்தான் இவர்களை அச்சமடைய வைத்திருக்கிறது.

மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம் இருக்கும். அது போலத்தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து மடியில் கட்டி வைத்திருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கும் - சர்வதேச சமூகத்துக்கு முன்பாகச் செல்லப் பயமாக இருப்பதில் வியப்பேதுமில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# கிழக்குத் திமோரை சர்வதேசம் ஏற்றதுபோல் தமிழீழத்தையும் ஏற்கும் நிலை உருவாகிறது!

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச எச்சரிக்கை



கொழும்பு

கிழக்குத் திமோரை சர்வதேசம் ஏற்றுக் கொண்டதைப்போல தமிழீழத்தையும் ஏற்கும் வகையிலேயே மிக நுணுக்கமாக நோர்வே தமது செயற்பாடுகளை நகர்த்திச் செல்கிறது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றியபோதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

நோர்வேயை வெளியேற்றும் விடயத்தில் மேலும் அரசாங்கம் தாமதித்தால் அது நாட்டுக்கு பெரும் ஆபத்தாக முடியும்.

எமது தாய்நாட்டுக்கு எதிராக நீருக்கு மேலாகவும் நீருக்கு அடியாலும் தீ கொண்டு செல்லும் நோர்வேயை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர் என்ற பெயரில் தொடர்ந்தும் செயற்பட நாம் அனுமதிக்கமாட்டோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை இன்னும் சில வருடங்களுக்கு இழுத்துச் சென்று, அதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியிலான ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து, தமிழர்களுக்கு தனிநாட்டை உருவாக்குவதற்காகவே நோர்வே முழு மூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

அண்மையில ஜெனீவாவில் அரசாங்கத்துக்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னர் விடுதலைப் புலிகளின் குழுவை மட்டும் தமது நாட்டுக்கு அழைத்த நோர்வே, அரச தலைவர்களுக்கு வழங்குவதைப் போல தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு செங்கம்பள வரவேற்பு அளித்தது.

இரு தரப்பினருக்கும் அனுசரணையாளராகப் பணிபுரியும் நோர்வே, விடுதலைப் புலிகளை மட்டும் அழைத்துப்போக முடியாது, ஜெனீவா பேச்சுகள் முடிந்த பின்னர் புலிகளை தனிப்பட்ட விதத்தில் அழைத்து ராஜ மரியாதை செய்துள்ளமை அரசாங்கத்துக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

பேச்சுகளை சில வருடங்களுக்கு இழுத்தடிக்கச் செய்து, புலிகளை சர்வதேசத்துக்கெல்லாம் அறிமுகம் செய்து, அரசை ஒ[illegible] பொறிக்குள் சிக்கவைத்து, ஒவ்வொ[illegible] கண்டங்களாக புலிகளை அழைத்துச் சென்று - பேச்சுக்களை நடத்தி அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பு வாதங்களை நியாயமென சர்வதேசத்தை ஏற்கவைப்பதன் மூலம், தமிழீழத்தை பெற்றுக்கொடுத்து விடவேண்டும் என்பதில் புலிகளை விட நோர்வே முனைப்புடன் செயற்படுகின்றது.

இவ்வாறு புலிகள் தரப்போடு ஒரு பக்கமாக நின்று செயற்படும் நோர்வே தொடர்ந்தும் அனுசரணைப்பணியில் ஈடுபட நாம் அனுமதிக்க மாட்டோம். நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக நோர்வே மீது எடுக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடனடியாக எடுக்கவேண்டும்.

கடந்தஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை நோர்வேக்கு விட்டுக்கொடுக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# போலிக் கடவுச் சீட்டு வழக்கில் 74 வயது மூதாட்டிக்குச் சிறை

கொழும்பு

போலி கடவுச்சீட்டு தொடர்பான வழக்கில் 74 வயது மூதாட்டி ஒருவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி ஜப்பானிய தூதரகத்தில் விசா பெறுவதற்காக போலிக் கடவுச்சீட்டை தாக்கல் செய்ததாக கூறி எச்.எம். குணவதி பீரிஸ் என்ற மூதாட்டி கைது செய்யப்பட் டார்.

லலிதா இரங்கனியே பீரிஸ் தானே என்று அந்தப் பெண் கூறி பொலிஸாரின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இந்த வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி குறிப்பிட்ட மூதாட்டிக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

# பொருட்கள் சேவைகள் கட்டணம் தேர்தலின் பின் அதிகரிக்கும்!

கொழும்பு

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பின்னர் பொருட்களின் விலைகள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள் என்பன அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்களம், ரயில்வே திணைக்களம், இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு அரசாங்கம் 7 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டியுள்ளது.

பொருட்களின் விலைகளையும், சேவைகளின் கட்டணங்களையும் அதிகரிப்பதன் மூலமே இதனை ஈடுசெய்ய முடியும்.

இந்த நிலையில் அடுத்த மாதம் முதல் மின்கட்டணங்களும் அதிகரிக்கப்பட உள்ளதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னனுமதி பெற கோரிக்கை!

மட்டுவில்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் கட்டடங்கள் புதிதாக அமைப்போரும், திருத்தம் செய்வோரும் பிரதேச சபையின் முன்னனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும் என பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

உரிய விண்ணப்பத்தைப் பிரதேச சபையிடம் வரைபடத்துடன் சமர்ப்பித்து பிரதேசசபை செயலாளரது எழுத்து மூலமான அனுமதி பெறப்படாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (24)

# சங்காபிஷேகம்

நெல்லியடி

கோவிந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் சங்காபிஷேகமும், இலட்சார்ச்சனையும் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இந்த சங்காபிஷேகக் கிரியைகள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (12)

# வருடாந்த மகோற்சவம்

வடமராட்சி

உடுப்பிட்டி - இமையாணன் துவாளி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 14 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

# நெரிசல் மிக்க யாழ்.நகரை அழகுபடுத்துமா மாநகரசபை?

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் தினமும் அதிகளவான மக்கள் கூடும் ஓர் இடமாகவே யாழ்.நகரப் பகுதி காணப்படுகிறது.

நகருக்குத் தினமும் ஏராள



மான மக்கள் வந்து செல்கின்ற அதே வேளை - அந்த மக்கள் அதிகளவிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. தற்போதய நிலையில் யாழ்.நகருக்கு வருகின்ற மக்கள் முகம் கொடுக்கின்ற முக்கிய பிரச்சினையாக - சன, வாகன நெரிசலைக் குறிப்பிடலாம்.

எந்தத் தேவைக்காக எந்த நேரம் வருகின்றவர்களும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக மாறி வருகின்றனர்.

வைத்தியசாலை, வங்கிகள், வர்த்தக நிலையங்கள், வேறுபல தேவைகளுக்காக வருகின்ற மக்களும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பனவற்றுக்காக வருகின்ற மாணவர்களும் இந்தப் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளத் தவறவில்லை.

நகரில் சன, வாகன நெரிசல் ஏற்படுவதற்கு அதிகரித்த வாகன பயன்பாட்டுக்கு ஏற்ப வீதிகள் அகலமாக்கப்படாமை, மின்சார நிலைய வீதி, மணிக் கூட்டு வீதி என்பன மக்களின் பாவனைக்கு திறந்துவிடாது படையினர் மூடிவைத் திருப்பது. நடைபாதை வியாபாரங்கள், தனியார் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான பொருத்தமான அமைவிடம் இல்லாமை, தினமும் பொருட்களை இறக்குகின்ற லொறிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வீதிகளில் நெரிசல் காணப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்ற போதும் - முக்கியமாக இரண்டு விடயங்களுக்கு மாநகர சபை ஒழுங்கான முறையில் உரிய மாற்று வழிகளை மேற்கொள்வதன் மூலம் இயன்றளவு நெரிசலைக் குறைத்துக் கொள்ளலாம்.

முக்கிய பிரச்சினைகளாகக் கருதப்படுகின்ற நடைபாதை வியாபாரமும், தனியார் வாகனத் தரிப்பிடமே இவையாகும்.

நீண்டகாலமாக நீடிக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண - கோட்டைப் பகுதியில் முனீஸ்வரன் ஆலயச் சூழலில் நடைபாதை வியாபாரிகளுக்கான விற்பனை அங்காடியும், தனியார் வாகனங்கள் தரித்து நிற்பதற்கான மினிபஸ் நிலையமும் அமைக்கபட்டன.

இவற்றை மக்களின் பாவனைக்கு திறந்துவிடாது இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

நடைபாதை வியாபாரிகள் நகரின் பிரதான வீதிகள் அனைத்திலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற போதும், குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் வைத்தியசாலை வீதி, மின்சார நிலைய வீதி, கோட்டை முனீஸ்வரன் வீதி போன்ற வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகிறவர்களாலேயே பெருமளவு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

வைத்தியசாலை வீதியில் - பஸ் நிலையத்திலிருந்து வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுவரை - வீதியின் இரண்டு பக்கங்களிலும் நடை பாதை வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதனால் நாளாந்தம் வைத்தியசாலைக்கு காலை, மாலை என இருவேளையிலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் வந்து போகின்ற போது நெரிசல் காரண மாக வாகனவிபத்துகள் ஏற்படுவதுடன், சிலவேளைகளில் உயிரிழப்புகளையும்




சந்திக்க நேரிடுகிறது.

இந்த நிலை மாற்றமடைய வேண்டுமானால் - நடைபாதை வியாபாரிகள் அந்த வீதிகளை விட்டு அகலவேண்டும். வியாபாரிகளை அப்புறப்படுவதற்கு நடைபாதை வியாபாரிகளுக்கென அமைக்கபட்ட விற்பனை அங்காடி விரைவாக திறந்து வைப்பதன் மூலமே இந்தப் பிரச்சினையை நீக்கிக் கொள்ள முடியும்.

மின்சார நிலைய வீதியில் - பழ வியாபாரம் செய்பவர்களும், புடவை விற்பனை நிலையங்களுக்கு முன்பாக வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாலும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியதாக இருக்கின்றது. அவர்களது விற்பனையும் பாதிப் படைகின்றது.

இதேவேளை முக்கிய பிரச்சினையாக இருக்கின்ற மற்றொரு விடயம் - தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களாகும் தனியார் பஸ்களை நிறுத்துவதற்கான இடம் முற்ற வெளிப் பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட போதும் அதற்குரிய அடிப்படை வசதிகள் சில இல்லாத நிலையில் பாவனைக்காக திறந்துவிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படை வசதிகள் செய்யமுடியாத நிலையில் பல லட்சம் ரூபா செலவில் கட்ட டம் அமைத்தது ஏன் என்று தான் புரியவில்லை. எது எவ்வாறு இருக்கின்ற போதிலும் தனியார் பஸ் வண்டிகளை - வண்டி உரிமையாளர்கள் தமது வசதிக்கு ஏற்றமுறையில் பல இடங்களில் தரித்து விடுகின்றனர்.

குறிப்பாக பழைய தபாலக வீதி, மின்சாரநிலையவீதி, வைர... கோவில் வீதி போன்ற இடங்களில் தரித்து விடுவதால் போக்குவரத்து செய்வதற்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

பழைய தபாலகவீதி, மின்சார நிலைய வீதியூடாகப் போக்குவரத்து செய்வதாயின் நீண்ட நேரம் காத்திருந்தும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பழைய தபாலக வீதியில் இரண்டு பக்கங்களிலும் மினி பஸ்களை நிறுத்தி விடப்படுகின்ற நிலையில் சிறிய பாதையூடாக போக்குவரத்துச் செய்வதனாலே இந்த நிலைமை ஏற்படுகின்றது.

இவற்றைவிட முக்கிய பிரச்சினையாக ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்களை இறக்குவதற்காக லொறிகள் நீண்ட நேரமாகத் தரித்து நிற்பதுவும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

போக்குவரத்து நெரிசல் காரணமாக ஏற்படுகின்ற சனநெரிசல், வாகன நெரிசல் குறைய வேண்டுமானால் மாநகரசபை நடைபாதைவியாபார நிலையம், தனியார் பஸ்தரிப்பிடம் என்பனவற்றை புதிய இடத்துக்கு மிகவிரைவில் மாற்றம் செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதன் மூலம் நெரிசல் பிரச்சினைகளைத் தீர்ப்பது மட்டுமன்றி, கரை அழகுற வைத்திருப்பதற்கும் மாநகரசபை உரிய நடவடிக்கையை உரிய காலத்தில் எடுக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும். ▲

அருள்

# மிரட்டலும் உருட்டலும் பலிக்குமா மாணவர்களிடம்?

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வலயக்கல்வி பணிப்பாளர்கள், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரை காங்கேசன்துறைப் படைத்தளத்துக்கு அழைத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி நடத்திய சந்திப்பில் இராணுவத்தால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கு இடையில் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுக்கள் முன்னேற்றகரமாக இருந்தது



என்றும், அடுத்தக்கட்டப் பேச்சுக்களில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் - மக்களை மீளக் குடியமர்த்தல், பாடசாலைகள்,பொது இடங்களிலிருந்து இராணுவத் தினர் வெளியேறுதல் போன்ற பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஆராயப்படும் என கூறப்பட்டது.இந்த நிலையில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய வலயக் கல்விப்பணிப்பாளர்கள் மேலதிக மாகாண கல்விப்பணிப் பாளர்கள் ஆகியோரை அழைத்திருந்தார். இந்தச் சந்திப்பில் பாடசாலைக ளில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் வெளியேறுவார்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பாடசாலைகளை சூழ முகாம்களையும் காவலரண்களையும் அமைத்திருக்கும் இராணுவத்தினர் வெளியேற்றப்படுவார்கள். அல்லது அடையாள அட்டைகளை இனி மேலும் தடைமுகாம்களில் ஒப்படைக்காது பாடசாலைக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் செல்லக் கூடியதாக இருக்கும். இராணுவ வாகனங்களும், உலங்கு வானூர்திகளும் பயிற்சி பெறும் பாடசாலை மைதானங்கள் விடுதலை பெறும். இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தமின்றி மாணவர்கள் அரசின் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் இயல்பான ஒரு சூழலில் கல்வியைப் பெறக்கூடிய சூழலை உருவாக்குவது பற்றி பேசப்படும் என்றெல்லாம் எதிர் பார்க்கப்பட்டது.

எனினும், இந்த எதிர்பார்ப்புகள் யாவுமே கானல் நீராகியது. இராணுவத்தினரின் நலன்களுக்காகவும், எதிர் காலத்தில் இராணுவத்தினர் மாணவர்களை தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கமுடையதுமாகவே இந்தச் சந்திப்பு அமைந்திருந்தது.

மாணவர்கள் நடத்தும் போராட்டம் - இராணுவத்தினரின் மனநிலையை பாதிக்கும் என்பதை மையமாக வைத்தே கல்வி அதிகாரிகளை படைத்தளபதி சந்தித்தார்.

மாணவர்கள், ஆசிரியர்களின் நலன், குடாநாட்டு கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற மிக நல்ல சிந்தனையுடன் கல்விப்பணிப் பாளர்களை அழைத்திருந்தால் மாணவர்களின் கல்வி நிலை குறித்து படைத்தளபதி பேசியிருப்பார். பாடசாலைகளை சூழவுள்ள காவலரண்கள், இராணுவ முகாம்கள், சோதனைச்சாவடி என்பவற்றை அகற்றி மாணவர்கள் அடையாள அட்டையை சோதனைச்சாவடிகளில் கொடுக்காமல், தடைமுகாமைத் தாண்டி போக முடியும்மெனக் கூறியிருப்பார்.

ஆனால் மாணவர்களின் கல்வியைப் பற்றி எந்தப்பேச்சும் பேசாது, மாணவர்களை எந்தவொரு அரசியல் நடவடிக்கைக்கும் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. கடந்த காலங்களில் மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதால் பல பிரச்சினைகளுக்கு எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இனிவரும் காலங்களில் மாணவர்களை அரசியல் நடவடிக்கை களுக்கு ஈடுபடுத்துவது அனுமதிக்க முடியாது என மிரட்டும் வகையில் ஒரு கண்டிப்பான எச்சரிக்கையை இராணுவத் தளபதிவிடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியின் இந்த அறிவிப்புக்கு மாணவர்கள் கட்டுப்படமாட்டார்கள் என்பதை அவர்கள் நடத்திய பகிஷ்கரிப்பு, கொடும்பாவி எரிப்பு போராட்டகள் எடுத்துக் காட்டுகிறன. இராணுவத்தினருக்கு எதிராக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடாமல் இருப்பது இராணுவத்தினர் கைகளில் தான் இருக்கிறது.

மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதற்கு இடையூறு ஏற்படாத வகையில் நடந்து கொள்ளுதல், பாடசாலை சூழலில் இருந்து வெளியேறுதல் அவர்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள், தாக்குதல்கள், மிரட்டல்களை நிறுத்தினால் மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிராக வன் முறைகளில் ஈடுபடுவதையோ, போராட்டங்களில் ஈடுபடுவதையோ தவிர்ப்பார்கள்.

இதனை விட்டு முற்று முழுதான இராணுவ நோக்கத்துடன் மாணவர்களைத் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க நினைப்பது எட்டாக் கனியாகவே இருக்கும். இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல் ஒருபுறமிருக்க, இந்த மாநாட்டுக்குச் சென்ற கல்வி அதிகாரிகளின் கோரிக்கை தான் வெட்கி தலைகுனிய வைத்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் நாளாந்தம் இராணுவ சோதனை சாவடிகள் ஊடாகவும், முகாம்கள் ஊடாகவும் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைத்துள்ள பாடசாலைகளுக்குச் சென்று திரும்பும் போதும் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றி இவர்கள் ஒன்றுமே பேசவில்லையாம். தமக்கு இல்லாத பிரச்சினை பற்ற தான் என்று பேசாமல விட்டு விட்டார்கள் போல்.

இதைவிட வேடிக்கையாகவும்,நகச்சுவை யாவும் இருந்த இன்னொரு விடயம் என்ன தெரியுமா? இராணுவத் தளபதியிடம் யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு இலவச பாடப்புத் தகங்கள் உரிய காலத்தில் கிடைப் பதில்லை என்று சொன்னார்களாம். இராணுவத்தினருக்கு எந்தத் தொடர்பும் இல்லாத இந்தக் கேள்வி இராணுவத் தளபதிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாமல் இருந்திருக்குமா?

சந்திரமோகன்

# பாரதீய ஜனதா தனித்துப் போட்டி வெங்கையா நாயுடு அறிவிப்பு!



சென்னை—

தமிழக சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி தனித்துப் போட்டியிடும் என்று வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி தனித்துப் போட்டியிடுவது என்று முடிவு எடுக்கப் பட்டுள்ளது. அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. ஆகிய எந்தக் கட்சியுடனும் கூட்டணி சேரமாட்டோம். கூட்டணி குறித்துப் பேச அ.தி.மு.கவிலிருந்து யாரும் எங்களிடம் வரவில்லை. அதேபோல் விஜயகாந்த் கட்சியுடன் கூட்டணி தொடர்பாக எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை.

இந்தத் தேர்தல் வழக்கமாக இருப்பது போல் இருக்காது. வழக்கமாக அ.தி.மு.க. அணி அல்லது தி.மு.க. அணி வெற்றி பெறும். ஆனால் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் முழுப் பெரும்பான்மை கிடைக்காது. தமிழ் நாட்டில் யாருக்கும் ஆதரவு அலை வீசவில்லை.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க. அறிவித்த சலுகைகள் எதுவும் தேர்தலில் எடுபடாது. அ.தி.மு.கவுடன், ம.தி.மு.க. கூட்டணி சேர்ந்திருப்பது இரு கட்சித் தொண்டர்களையும் உற்சாகப்படுத்தவில்லை. ஆளுங் கட்சியான அ.தி.மு.க. மீது மக்களுக்கு இருக்கும் அதிருப்தி தேர்தலில் எதிரொலிக்கும்.

அதேபோல், மத்திய அரசின் மீதுள்ள அதிருப்தி தி.மு.க. கூட்டணிக்குப் பாதகமாக அமையும். அதனால் இந்த இரு கட்சிகளுக்கும் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்.


இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறோம். எங்களுடன் தொகுதி உடன்பாடு செய்துகொள்ள சுப்பிரமணிய சுவாமியின் ஜனதா கட்சி முன்வந்துள்ளது. அதேபோல் நாடார் அமைப்பு, அருந்ததியர் சங்கம், போவட் புளொக் உட்பட பல அமைப்புகள் ஆதரவு அளித்துள்ளன.

அதனால் பாரதீய ஜனதா கட்சி எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது என்பதை நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களிடம் நாளை முதல் 15 ஆம் திகதி வரை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 15ஆம் திகதி பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் குழு கூடுகிறது. தேர்தல் தொடர்பான ஏனைய விடயங்கள் பற்றி இந்தக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப் படும்.

வைகோ அறிவாளி தான். ஆனால் மக்கள் அவரை விட அறிவாளிகள். அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்ததற்கான காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார். தான் கைதாகி சிறையிலிருந்ததற்கு அப்போது இருந்த வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்த பொடா சட்டம் தான் காரணம் என்று வைகோ சொல்லியிருப்பது இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவையாகும். பொடா சட்டத்தை அமுல்படுத்துவது மாநில அரசுதான் என வெங்கையா நாயுடு மேலும் தெரிவித்தார்.

# தி.மு.க. குடும்பத் தொலைக்காட்சியை தேர்தல் முடியும்வரை பார்க்கவேண்டாம்!

## என்கிறார் நடிகர் செந்தில்



பழநி—

தமிழகத்தில் தேர்தல் முடியும்வரை பொதுமக்கள் தி.மு.க. குடும்பத் தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டாம் என்று நடிகர் செந்தில் தெரிவித்தார்.

பழநியில் அ.தி.மு.க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. அங்கு நடிகர் செந்தில் பேசுகையில் -

முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் சாதனைகள் அதிகம். கருணாநிதி ஆட்சியில் வேதனைகள் அதிகம். தி.மு.கவில் ராஜாத்தி அம்மாள், தயாளு அம்மாள், ஸ்டாலின், அழகிரி, கனிமொழி என்று இட ஒதுக்கீடு உள்ளது. இதுவே இன்னும் முடியவில்லை. அப்படியிருக்க எப்படி கூட்டணிக்கு ஒதுக்கீடு செய்ய முடியும். மக்களுக்கு நல்ல திட்டங்களை முதல்வர் வாரி வழங்குகிறார். பா.ம.க. - ராமதாஸ் விரல் வை காயும் முன் அடுத்த கட்சிக்குத் தாவக்கூடியவர். பொது மக்கள் தேர்தல் முடியும்வரை தி.மு.க. குடும்பத் தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டாம். உங்களைக் குழப்பி விடுவார்கள் என்று தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணி உடைந்து பலமிழந்துவிட்டதாம்!

## சொல்கிறார் விஜயகாந்

கோவில்பட்டி—

தி.மு.க கூட்டணி உடைந்து பலமிழந்து விட்டது என விஜயகாந் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

தேசிய முற்போக்கு திராவிட கழகத்துக்கு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வாக்கு கேட்டு வருகிறேன்.

கடந்த 40 ஆண்டுகளாக மக்கள் மாறிமாறி தி.மு.க.வுக்கும், அ.தி.மு.கவுக்கும் வாக்களித்தனர். உங்கள் சந்ததிகள் நலனுக்காக நல்ல ஆட்சி கொடுக்க இந்தத் தேர்தலில் எங்களுக்கு வாக்களியுங்கள். எங்கள் 7 கட்சி கூட்டணி எஃக்கு கூட்டணி என்று தி.மு.க கூறியது. அது உடைந்து விட்டது. தி.மு.க பலம் இழந்துபோய்விட்டது.

நான் கட்சி ஆரம்பித்து 8 மாதம் தனியாகஉங்களை சந்திக்க வருகிறேன். நான் கிராமம் கிராமமாக சென்று மக்களை சந்தித்து வருகிறேன். எந்த அரசியல் கட்சி தலைவர்களும் இப்படி சுற்றியது இல்லை.

அ.தி.மு.க – தி.மு.க இரு கட்சிகளும் மாறி மாறி ஊழல் புகார் கூறி ஆட்சிக்கு வரும், இவர்கள் குடிநீர் பிரச்சினையை தீர்க்கவில்லை. தாமிரபரணி தண்ணீர் வெளிநாட்டு நிறுவன குளிர்பானம் தயாரிக்கக் கொடுக்கிறார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என அவர் தெரிவித்தார்.

## நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட்டோர் பணிக்கு சமுகமளித்தல் - 2006.03.10

*2006.02.25 ஆம் நாள் நடைபெற்ற நில அளவையாளர் கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள் என்பதை மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.*

*கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளதால் தங்கி நிற்பதற்குரிய ஒழுங்குகளுடன் குறித்த தேர்வாளர்கள் 2006.03.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவை, நடுவப் பணியகத்துக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

| இல | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | திரு.கா.அனுரதன் | உருத்திரபுரம், கிளிநொச்சி. |
| 2 | செல்வி.ர.சிந்துஜா | உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. |
| 3 | திரு.பெ.சுரேந்திரன் | பிரமந்தனாறு, விசுவமடு. |
| 4 | செல்வி.பொ.ஜோதி | இல,770, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி. |
| 5 | செல்வி.ஜெ.மோகனவிஜி | இல, 721, சிவிக்சென்ரர், வட்டக்கச்சி. |
| 6 | செல்வி.ஜெ.ஜெயவிஜிதா | இல, 55, கட்சன் வீதி, வட்டக்கச்சி. |
| 7 | திரு.இ.போல்ராஜ் | விவேகானந்தநகர், கிளிநொச்சி. |
| 8 | திருமதி.பா.கலைச்செல்வி | கனகபுரம், கிளிநொச்சி. |
| 9 | திரு.இ.கருணாகரன் | டிப்போ வீதி, பூக்கன்றுக்கடை, செல்வாநகர். |
| 10 | திரு.ம.விஸ்ணுமோகன் | பிரதான வீதி, கண்டாவளை. |
| 11 | செல்வி.ம.நிஷாந்தினி | 26, இளங்கோபுரம், றெட்பானா. |
| 12 | திரு.சே.மகேஸ்வரன் | இல, 9, இடதுகரை, கனகரத்தினபுரம், முத்து ஐயன்கட்டு, ஒட்டுசுட்டான். |

**பொறுப்பாளர், ஆளணிப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ நிர்வாகசேவை,**
**தமிழீழம்.**

[C/4449]

# மத்தியில் ம.தி.மு.க. நீடிக்கக் கூடாதென்பது கருணாநிதியின் சொந்தக் கருத்தாகும்!

## காங்கிரஸ் திட்டவட்டமாக அறிவிப்பு

சென்னை—

மத்தியில் ஆளும் கூட்டணியிலிருந்து வைகோவை நீக்கவேண்டும் என்ற கருணாநிதியின் கருத்தை ஏற்க காங்கிரஸ் மறுத்துவிட்டது. மத்திய கூட்டணியில் வைகோ நீடிப்பார் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் ம.தி.மு.க. இடம்பெற்றுள்ளது. அந்தக் கட்சிக்கு 4 எம்.பிக்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியிலிருந்த ம.தி.மு.க., தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட பிரச்சினையால் தி.மு.க. கூட்டணியை விட்டு விலகி அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்தது.

அ.தி.மு.கவுடன் கூட்டணி உடன்பாடு ஏற்பட்டதும் நிருபர்களுக்குப் பேட்டியளித்த ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ- தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகினாலும் மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் நீடிப்போம் என்று தெரிவித்தார்.

ஆனால், அதற்கு மாறாக மத்திய கூட்டணியில் வைகோ நீடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து காங்கிரஸ் கட்சி தனது நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் டெல்கியில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி, மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் ம.தி.மு.க. நீடிக்கக் கூடாது என்பது தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சொந்தக் கருத்து. இது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி யின் கருத்து அல்ல என்று தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

தமிழ்நாட்டில் வைகோ அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்திருப்பது மத்திய கூட்டணியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருப்பது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். வைகோ விவகாரத்தில் நாங்கள் மனதை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

கூட்டணி அரசில் எப்போதும் மாநில கூட்டணிக்கும், மத்திய கூட்டணிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. மாநில அளவில் ம.தி.மு.க., அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தாலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தொடர்ந்து அங்கம் வகிப்பதில் தவறில்லை. ம.தி.மு.க. தொடர்ந்து மத்திய கூட்டணியில் நீடிக்கலாம். கடந்த கால ஆட்சியிலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.




# காசியில் குண்டுவெடித்ததில் பக்தர்கள் உட்பட 25பேர் பலி!



வாரணாசி—

உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 25பேர் வரை பலியாகினர்.

அங்குள்ள பிரசித்திபெற்ற காசி விசுவநாதர் கோவில் அருகே அனுமார் கோவிலுள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை என்பதால் அந்தக் கோவிலில் விசேட பூசை நடைபெற்றது. பெருமளவு பக்தர்கள் பூஜையில் கலந்துகொண்டிருந்தனர்.

மாலை 6 மணியளவில் அந்தக் கோவிலில் பயங்கர சத்தத்துடன் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் பக்தர்கள் பீதியடைந்து நாலாபுறமும் சிதறி ஓடினர்.

குண்டு வெடிப்பில் பலர் உடல் சிதறிப் பலியாகினர். ஏராளமான பக்தர்கள் கை, கால்கள் துண்டிக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டனர். காயமடைந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களை கோவில் ஊழியர்கள் தூக்கிச் சென்று அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

கோவிலில் குண்டு வெடித்த சில நிமிடங்களில் அருகிலுள்ள கண்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் மற்றொரு குண்டு வெடித்தது. ரயில் நிலையத்தின் முதலாவது தளத்தில் டெல்கி செல்லும் சிவகங்கா எக்ஸ்பிரஸ் ரயில் நின்று கொண்டு இருந்தபோது இந்தக் குண்டு வெடித்தது.

இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் 25 பேர் பலியாகினர். 60 பேர் காயமடைந்தனர். கோவிலில் மட்டும் 10 பேர் இறந்தனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள பெனாரஸ் இந்து பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் எஸ்.எஸ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

வாரணாசி குண்டு வெடிப்பையடுத்து டெல்லி, மும்பை, சென்னை மற்றும் குஜராத் மாநிலம் உட்பட நாடு முழுவதும் உள்ள வழிபாட்டுத் தலங்கள், முக்கிய அரசு கட்டடங்களுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வாரணாசியிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் வெடிக்காத 4 குண்டுகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சாரநாத்திலும் ஒரு குண்டு கைப்பற்றப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வேட்புமனுக்களை ஏற்குமாறு உத்தரவிடக்கோரி மனு!

## முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிப்பு

கொழும்பு—

நீதிமன்ற தடை உத்தரவால் தாக்கல் செய்யமுடியாத வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12 மனுக்களை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தாக்கல்செய்த இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர் உட்பட தெரிவத்தாட்சி அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தடை உத்தரவால் கிழக்கு மாகாணத்தில் 12 உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியாது போனதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (01)

# லொறியில் நசியுண்டு குடும்பப் பெண் மரணம்!

## பரந்தனில் சம்பவம்

கிளிநொச்சி—

பரந்தன் பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரை பின்னோக்கி வந்த லொறி மோதியதில் அந்தப் பெண் சில்லினுள் நசிந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி உமையாள்புரம் கால் ஏக்கர் திட்டத்தில் வசித்துவரும் தனபாலசிங்கம் குமுதாஞ்சலி (வயது40) என்பவரே உயிரிழந்தவராவார்.

கரைச்சி வடக்கு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான லொறி பின்னோக்கிச் செலுத்தப்பட்டபோது வாகனத்துக்கு பின்புறமாக வந்த பெண்மீது வாகனத்தின் சக்கரம் ஏறியதில் நசியுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தப் பெண்ணின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணையை மேற்கொண்டு வருவதுடன், லொறியின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

# 9 கிலோ ஹெரோயினுடன் மூவர் கற்பிட்டியில் கைது

மன்னார்—

கற்பிட்டி நுரைச்சோலை - நரக்கள்ளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது நான்கரைக் கோடி ரூபா பெறுமதியான 9 கிலோகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரிலிருந்து - கற்பிட்டி நோக்கிப் பயணம்செய்த பஸ்ஸிலிருந்து ஹெரோயின் போதைப் பொருளோடு 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தப் போதைப் பொருள் இந்தியாவிலிருந்து படகுமூலம் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (01)

# சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவை உடனடியாக அமைக்கவேண்டும்!

## ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு தலைவர்

கொழும்பு—

17 ஆவது திருத்தச்சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்தி சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவை நிறுவுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜோன் குஷ்னகன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்புக்குழுவின் இறுதி அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் - முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவு சுதந்திரமாகவும் நீதியானதாகவும் நடைபெற்றது. இருப்பினும் வடக்கு - கிழக்கில் அவ்வாறான நீதியான நிலை காணப்படவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை ஜனாதிபதிக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஒரு சில அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

அரச உடைமைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. சில நேரங்களில் அரச ஊடகங்கள் பக்கச்சார்பாகச் செயற்பட்டன. வடக்கு - கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பான உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் எங்களுக்கு சிக்கல்களை உருவாக்கியது.

நாம் மீண்டும் இலங்கைக்கு வந்தது ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புத் தொடர்பான இறுதி அறிக்கையை கையளிக்கவே. தேர்தல்களுக்கு அவசியமான ஆலோசனைகள் இதில் அடங்கியுள்ளன. எவ்வாறெனினும் அரசியலமைப்பின் 17 ஆவது சரத்தில் திருத்தங்கள் சரியான முறையில் இடம்பெற்றால் தேர்தல் முறைகேடுகள் குறையும் என அவர் மேலும் தெரிவித்தார். (01)

## இறுதி...

டிசம்பர் 12 ஆம் திகதிமுதல் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் யாழ்.பல்கலைக் கழக இறுதி வருட மாணவர்களின் நன்மை கருதியும் இறுதிப்பரீட்சையை நோக்கமாகக்கொண்டு இராணுவ நெருக்கடிகள் தொடர்கின்ற நிலையிலும் பல்கலைக்கழக செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதென்ற பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தீர்மானத்துக்கு அமைய யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு செயற்பாடுகள் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. (த.வ)

# 34 நாட்டுப்பற்றாளர்கள் மட்டக்களப்பில் கௌரவிப்பு!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு முழுநேர ஆதரவாளர்களாக இருந்தபோது - இராணுவம், துணை இராணுவக் குழுக்கள் மற்றும் இந்திய இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் 34 பேர் நேற்றுமுன்தினம் சிறப்பிக்கப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை, புளியந்தீவு, வெல்லாவெளி, மாவடி முன்மாரி, கரடியனாறு, குடும்பிமலைக் கோட்டங்களைச் சேர்ந்த 34 நாட்டுப்பற்றாளர்களின் பெற்றோர், உறவினர்கள் இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நாட்டுப்பற்றாளர்களுக்கு 2 நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன், மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சீராளன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர். பின்னர் நாட்டுப்பற்றாளர்களுக்கான சிறப்பிப்புச் சான்றிதழ்களை உறவினர்களிடம் மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி வழங்கினார்.

வெல்லாவெளி கோட்ட தளபதி ஜோகராஜ், மாவட்ட மாவீரர் போராளிகள் குடும்பநலக் காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன், நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்பு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வா இந்த நிகழ்வில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தமிழர் தாயகப் பகுதியெங்கும் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்—

சர்வதேச மகளிர் தினம் நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அங்குள்ள பொது அமைப்புக்கள், மாதர் சங்கங்கள் என்பவற்றின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மத்திய கல்லூரியின் கலையரங்கில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி சிறப்புரை நிகழ்த்தினார்.

கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்திலும் மகளிர்தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பூநகரி கிராமத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு 40 பேருக்கு தலா ஐந்தாயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஆரம்பமான நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பாளர் திருமதி தேவாம்பிகை காசிநாதன் தலைமை தாங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை உட்பட பலர் இந்த நிகழ்வில் உரையாற்றினர். கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் அருள் மற்றும் பெருந்திரளான பாடசாலை மாணவிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நெடுங்கேணி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் வளாக மண்டபத்தில் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாதர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு செங்கலடி சோலை இராமகிருஷ்ணமிசன் மகாவித்தியாலய மண்டபத்திலும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றது.

## புலிகள்...

நிலைமைகள் குறித்தும், இந்தக் கருத்தரங்கின் நோக்கம் மற்றும் தேவை குறித்தும் விளக்கமளித்தார்.

தமிழ் மக்கள் மீது ஆட்சியாளர்கள் காலம் காலமாக மேற்கொண்டுவந்த அடக்குமுறை குறித்து விபரித்த பிறையன் செனவிரத்ன - இந்த நெருக்கடிக்கு நியாயமான தீர்வு கிட்டாத பட்சத்தில் தமிழ் மக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிப்பது சரியானது எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - தமிழ்மக்களின் நிலைப்பாட்டை ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தெரிவிப்பதன் மூலம் உரிய பலன் கிட்டும் என நம்பிக்கை வெளியிட்டார்.

## யுத்தத்தின்...

உள்ளோம். எமது தேசியத் தலைவரின் காலத்திலேயே எமது விடுதலையை நாம் வென்றெடுப்போம்.

ஜெயவர்த்தன, பிரேமதாச, விஜயதுங்க, சந்திரிகா, ரணில் ஆட்சிக் காலங்களில் ஒவ்வொரு சிங்களத் தலைமையும் எம்மை ஏமாற்றவே முனைந்தன. அதே பாதையில்தான் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செல்ல முனைகிறார்.

எமது விடுதலையை யுத்தத்தின் மூலம் வென்றெடுக்கும் சூழ்நிலையை மகிந்த ராஜபக்ஷ உருவாக்கி வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட தமிழீழ மாணவர் கூட்டமைப்பின் தலைவர் புரட்சி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரை இரு மாவீர்களினது தாயார் சிவம்மா ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை திருகோணமலை மாவட்ட தளபதி வசந்தன் ஏற்றினார்.

பயிற்சி பெற்ற படையணியின் அணிவகுப்பு மரியாதையை கேணல் சொர்ணம், தளபதி வசந்தன், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணன் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

கேணல் சொர்ணம், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், படையணி பயிற்சி ஆசிரியர் கணேசன் மற்றும் வாமன் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினர்.

திருமலைமாவட்ட கடற்புலிகளின் தளபதி புலவர், திருமலை மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் கலியன், சோதியா படையணியின் திருமலை மாவட்ட பொறுப்பாளர் மருதம் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு 34 பெண் கைதிகள் விடுதலை

கொழும்பு—

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 34 பெண் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதாக - நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெலிக்கடை, போகம்பர, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, ஆகிய சிறைச்சாலைகளிலிருந்து இந்தக் கைதிகள் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நன்னடத்தை அடிப்படையில் சிறிய குற்றங்களுக்குச் சிறைத் தண்டனை பெற்றவர்களே பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

தண்டப்பணம் செலுத்த தவறியமைக்காக சிறையில் அடைக்கப்பட்ட 70 வயது மூதாட்டி ஒருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, வறுமை காரணமாக தண்டப்பணம் செலுத்தமுடியாமல் சிறைவைக்கப்பட்ட 10 பெண்களும் விடுவிக்கப்பட்டனர். தேசமானிய லலித்கொத்தலாவலவின் உதவியுடன் இந்தப் பெண்கள் விடுதலை பெற்றனர்.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | ரூ 102.11 | ரூ 103.15 |
| ஸ்ரேலிங் பவுண் | ரூ 176.89 | ரூ 179.73 |
| யூரோ | ரூ 120.88 | ரூ 123.20 |
| சுவிஸ் பிராங் | ரூ 77.21 | ரூ 79.19 |
| அவுஸ்ரேலிய டொலர் | ரூ 74.33 | ரூ 76.28 |
| ஜப்பானிய யென் | ரூ 0.8647 | ரூ 0.8832 |

**மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள்**

| | |
|---|---|
| பஹ்ரேன் டினாரின் சுட்டிய விலை | ரூ 272.34 |
| குவைத் டினாரின் சுட்டிய விலை | ரூ 351.43 |
| ஓமான் றியாலின் சுட்டிய விலை | ரூ 266.60 |
| சவுதி றியாலின் சுட்டிய விலை | ரூ 27.37 |
| ஐக்கிய அரபு ராச்சிய திர்ஹாமின் சுட்டிய விலை | ரூ 27.95 |

# மரண அறிவித்தல்

## முருகேசுப்பிள்ளை சிவானந்தராசா

(முன்னாள் இ.போ.ச.மின்னிணைப்பாளர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசுப்பிள்ளை சிவானந்தராசா அவர்கள் நேற்று காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவரதி, சிவமதி, காலஞ்சென்ற சிவராகவன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 09.03.2006 (இன்று) பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சண்டிலிப்பாய் கொட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (இ)

தகவல்:-
க.கஜேந்திரன் (கஜன் கடை)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.